123

பூகோள சாஸ்திரம்

செங்கற்பட்டு

4 JAN 1940
MADRAS

3248

E. M. கோபாலகிருஷ்ணகோன்

மதுரை, சென்னை.

GEOGRAPHY

OF THE

CHINGLEPUT DISTRICT

915·482 [1]

CLASS IV

Prepared according to the New Syllabus for Elementary Schools, 1939

BY

V. Subburathnam Iyer, B.A., L.T.,

Geography Assistant, Islamia High School, Melvisharam

E. M. GOPALAKRISHNA KONE

MADURA MADRAS

Rights Reserved]

1939

[Price As. 6

First Edition—1939

Printed at the Excelsior Power Press, Madura. Page 1 to 20 & 55—58.
Do Kabeer Printing Works, Madras. Page 21 to 54.

முகவுரை

இச்சிறு புத்தகம் இவ்வருஷம் (1939) துரைத்தனத்தார் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தை யோட்டி நான்காவது வகுப்பு மாணவர்களுக்காக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

பூகோள சாஸ்திரமாவது மனிதன் எப்படி இயற்கையின் சக்தியை ஜயித்துப் பூமியைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான் என்பதைக் குறிக்கின்றது. ஓர் பிரதேசத்தின் இயற்கை யமைப்பினுல் மழை, சீதோஷ்ணம் ஆகிய இவைகளும், மழை, சீதோஷ்ணத்தால் பயிர்களும், பயிர்களால் மானிட வாழ்க்கையும் விசேஷ மாறுதல்களை அடைகின்றன.

இவ்விஷயங்கள் ஒன்றை யொன்று எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை ஆராயப் பல உண்மைகள் புலப்படும்.

"தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்றுக் கொள்ளுதல்" என்பது போதனு முறையில் முக்கிய விதியாகும். அதேபோல, பூகோளப் பாடத்திலும், ஒவ்வோர் புது விஷயத்தையும் கற்பிக்கும் பொழுது அடிக்கடி அந்தந்தக் கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி, அவைகளை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். உதாரணமாக ஒரு மலைப் பிரதேசத்தைப்பற்றிப் போதிக்கும் பொழுது, சமீபத்திலுள்ள குன்றுகளைக் குறிப்பிட்டு, இவற்றிற்கும் அதற்கும் பரிமாணம் முதலியவைகளில் உள்ள சம்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

இதற்காகப் பிள்ளைகளை அடிக்கடி உல்லாசப் பிரயாணங்களுக்கு (Excursions) அழைத்துச் செல்வது நலம். சமீபத்திலுள்ள குன்றுகள், ஏரிகள், நதிகள், வயல்கள், வண்டிப்பேட்டை, பஸ்கள் நிற்குமிடம், ரயில்வே ஸ்டேஷன் ஆகிய இவைகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று, இவைகளைப் பற்றிய விஷயங்களை நேராகத் தெரிந்து கொள்ளும்படி செய்தால், மற்ற வெளியிடங்களைப் பற்றிப் பயிலுங்காலத்து, இவ் விஷயங்கள் அதிக உபயோகமுள்ளவைகளாக இருக்கும். "சுதேசப் பிரதேசமே (Home Region) எல்லாப் பூகோள சம்பந்தமான விஷயங்களையும் அறிந்து கொள்ளுவதற்கேற்ற ஆராய்ச்சிச் சாலை."

உல்லாசப் பிரயாணம் செய்யும் சமயத்தில், வழியில் கிடைக்கும் அதிசயப் பொருள்கள், தானியக் கதிர்கள், இன்னும் மற்றப் பொருள்களை அவ்வப்போது சேர்த்து, ஒவ்வொரு வகுப்பிலும் பொருட்காட்சிகள் (Museums) வைக்கலாம். சமாசாரப்பத்திரிகைகள், ரயில்வே விளம்பரங்கள், சர்க்காரின் விவசாய வர்த்தமானங்கள், மற்றும் இதர இலாகாக்களில் வெளியிடப்படும் அறிக்கைகளில் பூகோள சம்பந்தமான வர்த்தமானங்கள் ஆகிய இவைகளையும் சேகரித்தல் நலம்.

போக்கு வரவு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து, நேராக அவைகளில் பிரயாணம் செய்வதுபோல் வர்ணனை முறை பின் பற்றப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படித்த பாடங்களைத் தாமே சிந்தித்து, விஷயங்களை உணர்வதற்கேற்ற பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் பல கேள்விகள் பிள்ளைகளின் சொந்தக் கிராமங்களைப் பற்றியவையாகும்.

இப் புத்தகத்தின் முன்னேற்றத்துக்குரிய விஷயங்கள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப் பெறும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
பொது விபரம்		
1.	எட்டுத் திசைகள்	1
2.	வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்	2
3.	பருவ காலங்கள்	3
4.	வாயு, காற்று	4
5.	தண்ணீர் நீராவியாகுதல்	5
6.	மழையும் அதன் செய்கையும்	6
7.	கடலும் கடற் பிரயாணமும்	7
8.	கிராமமும் நகரமும்	9
9.	எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன ?	12
10.	கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்	,,
11.	உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்	13
12.	போக்கு வரவு மார்க்கங்கள்	15
13.	சந்தை கூடுமிடம்	17
14.	தொழிற்சாலைகள்	18
15.	படங்களும் பிளான்களும்	19
செங்கற்பட்டு ஜில்லா		
16.	எல்லைகள்	21
17.	இயற்கையமைப்பு, நதிகளும், ஏரிகளும்	22
	1. மலைகள்	,,
	2. நதிகள்	24
	3. ஏரிகள்	25
18.	தாலுகா, ஜில்லாவிலுள்ள, விளைபொருள்களும் கைத்தொழில்களும்	26
19.	தாலுகாக்களும் முக்கிய பட்டணங்களும் அங்குள்ள தொழில்களும்	31
	i. பொன்னேரித் தாலுகா	,,
	ii. திருவள்ளூர் தாலுகா	32
	iii. ஸ்ரீபெரும்பூதூர் தாலுகா	,,
	iv. சைதாப்பேட்டைத் தாலுகா	33
	v. செங்கற்பட்டு தாலுகா	34
	vi. காஞ்சிபுரம் தாலுகா	38
	vii. மதுராந்தகம் தாலுகா	40
20.	போக்குவரவு சாதனங்கள்	41
	1. கடற் பிரயாணம்	,,
	2. சாலை மார்க்கம்	45
	3. ரயில் மார்க்கம்	50
21.	வியாபாரம்	53
22.	சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்	55

பூகோள சாஸ்திரம்

நான்காம் வகுப்பு

பொது விவரம்

முதல் பாடம்

எட்டுத் திசைகள்

பிள்ளைகளே, அதி காலையில் நாம் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்து சூரியன் உதிப்பதைக் காண்கிறோம் அல்லவா? சூரியன் உதிக்கும் திசைக்குக் கிழக்கு என்று பெயர். நாம்



கிழக்குப் பக்கம் திரும்பி நின்றால், மற்றத் திசைகளைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். நமது முதுகு புறம் இருக்கும் திசை மேற்கு; வலக் கைப் புறம் தெற்கு; இடக்கைப்புறம் வடக்கு.

இந்த நான்கு திசைகளுக்கும் இடையிடையே மூலையில் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. அவைகளுக்கு உப திசைகள் என்று பெயர். வடக்கு, கிழக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வடகிழக்கும், கிழக்கு, தெற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென்கிழக்கும், தெற்கு, மேற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென் மேற்கும்,



திசைப் படம்

மேற்கு, வடக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வட மேற்கும் உள. ஆகவே



திசை காட்டும் கருவியின் படம்

திசைகள் எட்டு. இத்திசைகளைச் சுலபமாகத் தெரிந்து கொள்ள ஒரு கருவி இருக்கிறது. அதற்குத் தமிழில் ''திசைகாட்டும் கருவி'' என்று பெயர். அதில் எட்டுத் திசைகளும் குறிக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். அதன் மத்தியில் காந்த ஊசி அமைக்கப்பட்டிருக்கிறது. அது அசையும் தன்மை

யுடையது. அதன் ஒரு நுனி எப்பொழுதும் வடக்கையே நோக்கி நிற்கும். அதைக் கவனித்தால் மற்றத் திசைகளை இலகுவில் கண்டுபிடிக்கலாம்.

ஒரு தேசப்படத்தின் திசைகளை அறிவது எப்படி? படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதை நோக்கி ஒரு



தேசப்படத்தின் திசைகளை அறிதல்.

பையன் நின்றால், படத்தின் தலைப் பக்கம் வடக்கு; அடிப்பக்கம் தெற்கு; பையனது வலக் கைப்பக்கம் கிழக்கு; இடக் கைப்பக்கம் மேற்கு.

இரண்டாம் பாடம்

வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்

பிள்ளைகளே, ஒரு நாளில் பாதிப் பொழுது வெளிச்சமாக இருக்கிறது. அப்பொழுதைப் பகல் என்று சொல்லுகிறோம். பாதிப் பொழுது இருட்டாக இருக்கிறது. அப்பொழுதை இரவு என்று சொல்லுகிறோம். பகற் பொழுது சூரியனுடைய வெப்பத்தால் சூடாகவும், இராப் பொழுது சூரிய வெப்பம் தோற்றுததால் குளிர்ச்சியாகவு மிருக்கிறது. நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது வெயில் அதிகமாக இருப்பதில்லை. அதேபோல் நீங்கள் மாலை வேளையில் பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போதும் அவ்வளவு வெயில் இல்லை யல்லவா? ஆனால் நடுப் பகலில் வெயில் மிகவும் அதிகமா யிருக்கிறதல்லவா? ஒவ்வொரு நாளிலும் இம்மாதிரி மாறுதல்களைக் காண்கிறோம்.

சில தினங்களில் நாம் சூரியனைப் பார்க்கமுடியாதல்லவா? ஏன்? அப்போது சூரியனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரிமேகமுள்ள நாட்களில் சூரியன் நமக்கு நன்றாய்த் தெரியாது. அந்தத் தினங்களில் வெயில் குறைவாக இருக்கிறது. ஆகையால் அந்த நாட்களில் நடுப்பகலில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும் போதாவது, மறுபடி பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதாவது வெயில் சுடுவதில்லை அல்லவா?

வேறு சில தினங்களில் வெயிலே இருப்பதில்லை. அந்நாட்களில் ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டு மழைபெய்கின்றன. மழை நாட்களில் நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போவதும், சாயங்கால நேரங்களில் பந்து முதலியவை விளையாடுவதும் கஷ்டமாயிருக்கிறதல்லவா? சில நாட்களில் இம்மாதிரியான மாறுதல்களைக் காண்கிறோம்.

பயிற்சி

1. எட்டுத் திசைகள் எவை? அவைகளை நீ எப்படிக் கண்டு பிடிப்பாய்?

2. எந்தக் கருவியில் எட்டுத் திசைகளும் காட்டப்பட்டிருக்கின்றன?

3. ஒவ்வொரு நாளும் சீதோஷ்ண நிலை எவ்விதம் மாறுபடுகிறது?

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—கீழ்க்கண்டவாறு உள்ளூரின் சீதோஷ்ணத்தைக் குறிக்கும் அட்டவணை யொன்று தயார் செய்து, அதை ஒவ்வொரு நாளும் வகுப்பில் பிள்ளைகளின் எதிரே பூர்த்தி செய்யவும். உதாரணமாக, முதல் தேதி யன்று வெயில் அதிகமாயிருந்தால் வெயில் நாள் என்ற தலைப்பின் கீழ் முதல் தேதிக்கு நேரே × இம்மாதிரி அடையாளம் செய்யவும். பெரிய கடிதாசியில் ஒவ்வொரு மாதத்துக்கும் தனித்தனி அட்டவணை தயார் செய்து, வகுப்பில் பிள்ளைகள் பார்க்கும்படியாகச் சுவரில் தொங்கவிடவும். மாதக் கடைசியில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் எத்தனை நாட்கள் என்று குறிப்பிடவும்).

சீதோஷ்ண அட்டவணை

ஊரின் பெயர்.................... ....மாதம்

தேதி	வெயில் நாள்	மழை நாள்	மேகமுள்ள நாள்	காற்று அடிக்கும் நாள்

மூன்றும் பாடம்

பருவ காலங்கள்

முன் பாடத்தில் ஒவ்வொரு நாளும் காலையிலும், நடுப்பகலிலும், சாயங்காலத்திலும் வெயில் ஒரே மாதிரி இருப்பதில்லை என்றும், சில நாட்களில் வெயில் அதிகமாகவும், சில நாட்களில் குறைவாகவும், சில நாட்களில் குளிர் மிகுந்தும் சில நாட்களில் மழை மிகுந்தும் இருக்கின்றன என்றும் படித்தோமல்லவா? இம்மாதிரி ஒரு வருஷத்தில் ஏற்படும் மாறுபாடுகளுக்குப் பருவ காலங்கள் என்று பெயர்.

ஒரு வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் அல்லவா? இப்பன்னிரண்டு மாதங்களையும் சீதோஷ்ண மாறுதல்களுக்குத் தக்கவாறு ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். மழை அதிகமாய்ப் பெய்யு நாட்களைக் கார்காலம் என்றும், குளிர் அதிகமாக உள்ள நாட்களைக் குளிர் காலம் என்றும், குளிருடன் பனியும் இருக்கும் நாட்களைப் பனிக்காலம் என்றும், பனிக்காலத்தில் சில நாட்களில் முன் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களை முன் பனிக்காலமென்றும், பின் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களைப் பின் பனிக்காலமென்றும், வெயில் அதிகமாயுள்ள நாட்களை (கோடைக் காலம்) வேனிற்காலமென்றும், வேனிற்கால ஆரம்பத்தை இளவேனிற்கால மென்றும், வெயில் அதிகமான காலத்தை முது வேனிற் கால மென்றும் பிரித்திருக்கிறார்கள்.

அவை யாவன:—

சித்திரை, வைகாசி — இளவேனிற் [காலம்.
ஆனி, ஆடி — முதுவேனிற் காலம்.
ஆவணி, புரட்டாசி — கார் காலம்.
ஐப்பசி, கார்த்திகை — குளிர் காலம்.
மார்கழி, தை — முன்பனிக் காலம்.
மாசி, பங்குனி — பின்பனிக் காலம்.

வேனிற் காலத்தில் தாவரங்கள் தளிர் விடும். பூஞ்செடிகள் பூத்து வாசனை வீசும். இளவேனிற் காலத்தில் குடியானவர்கள் தேவதைகளுக்குப் பொங்கலிட்டு விழாக் கொண்டாடுவார்கள். கார் காலத்தில் பகலில் கடுவெயில் காயும். மாலையில் மழை பெய்யும். ஆறு குளங்களில் நீர் நிரம்பும். குளிர் காலம் வரை குடியானவர்கள் நிலங்களை உழுது விவசாயம் செய்வார்கள்; பனிக் காலத்தில் பயிர் அறுவடை செய்வார்கள்.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் எந்த மாதங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கிறது ?
2. எந்த மாதங்களில் குளிர்ச்சி அதிகமாயிருக்கிறது ?
3. பருவங்களின் பெயரையும் ஒவ்வொன்றுக்குரிய மாதங்களின் பெயரையும் சொல்லு.

நான்காம் பாடம்

வாயு, காற்று



நாம் வசிக்கும் பூமியைச் சுற்றி வாயு வியாபித்திருக்கிறது. அதை நாம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அது நம் மேல் வீசும் போதும், மரம், இலைகள் முதலியன அசையும்போதும், அதன் செய்கையை யறிந்து கொள்ளலாம். மனிதர்கள், பிராணிகள், செடி, கொடிகள் முதலியன வாயு இல்லாவிட்டால் ஒரு நிமிஷமும் வாழ முடியா.

தண்ணீர் மேடான இடத்திலிருந்து பள்ளத்திற்கு ஓடுகின்றதல்லவா? அதே போல வாயுவும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசுகின்றது. பொதுவாக, குளிர்ந்த இடத்திலிருந்து உஷ்ணமான இடத்திற்கு வாயு வீசுகின்றது. இப்படி ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசும் வாயுவுக்குக் காற்று என்று பெயர். மெல்லிய காற்றை மந்த மாருதம், தென்றல் என்றும், பலமாக வீசும் காற்றைப் புயல், சூறவளி என்றும் சொல்லுவார்கள்.

காற்று நமக்கு அதிக உபயோகமுள்ளது. கோடைக் காலங்களில் இரவில் அதிகப் புழுக்கமாயிருக்கும்பொழுது, நம்மீது குளிர்ந்த காற்று வீசினால் நமக்கு எவ்வளவு சுகமாயிருக்கிறது! காற்றினால் நமக்கு மற்றோர் உபயோகமும் உண்டு. காற்று, மேகங்களைத் தள்ளிக்கொண்டு வந்து, நமக்கு மழையைக் கொடுக்கும்படி செய்கிறது.



காற்றின் திசைகாட்டும் கருவி

நாம் தெருவில் நிற்கும்போது காற்று வீசினால், அது எந்தத் திசையிலிருந்து எந்தத் திசைக்குவீசுகின்றது என்பதை யறியலாம். அன்றியும் இங்குப் படத்தில் காட்டியுள்ளது

போல் ஓர் கருவி இருக்கிறது. அதில் மேலே காட்டியுள்ள அம்பு போன்ற பாகம் சுலபமாகச் சுற்றக் கூடியது. கீழே காட்டியிருக்கும் நான்கு திசைக ளின் அடையாளங்களும் நகராதவை. காற்று வீசும்போது, அது எந்தத் திசையை நோக்கி வீசுகின்றதோ அந் தத் திசையை நோக்கி அம்பு திரும் பும். அப்பொழுது கீழே குறிப்பிட்டி ருக்கும் திசைகளின் உதவியால் காற்று எப்பக்கம் வீசுகிற தென்பதை யறியலாம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— படத்தில் காட்டியுள்ளபடி காற்றுத் திசை காட்டும் கருவி யொன்றை அட்டை அல்லது தகரத் தில் செய்து, ஓர் மூங்கிலைக் கீழே நட்டு, அதன் நுனியில் இக்கருவியைக் கட்டி, அது சுற்றுவதைப் பிள்ளைகளுக்குக் காண் பிக்கவும்).

பயிற்சி

1. காற்று நமக்கு எவ்விதம் உபயோ கப்படுகிறது?

2. காற்று எந்தத் திசையை நோக்கி வீசுகின்ற தென்பதை எப்படி யறிந்து கொள்ளலாம்?

ஐந்தாம் பாடம்

தண்ணீர் நீராவியாகுதல்

சிறுவர்களே, உங்கள் வீட்டில் சோறு சமைப்பதற்காக உலை வைக்கி றார்கள் அல்லவா? அதாவது ஓர் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அதை அடுப்பின் மேல் வைத்து, அடுப்பில் நெருப்பிட்டு எரிக்கிறார்கள் அல்லவா? கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்ன நடக்கிற தென்பதைக் கவனித் திருக்கிறீர்களா? பாத்திரத் தின்மீது படும் நெருப்பின் உஷ்ணம் அதிகரிக்கவே, பாத்திரத்திலிருந்து ஓர் புகை கிளம்புகிறது. இந்தப் புகைக்கு நீராவி என்று பெயர்.



உஷ்ணம் இன்னும் அதிகரித் துக் கொண்டே போனால் கொஞ்ச நேரம் பொறுத்துப் பாத்திரத்தில் தண்ணீரே இல்லாமல் போய்விடுகி றது. அவ்வளவு தண்ணீரும் எங்குப் போயிற்று? எல்லாம் நீராவியாகப் போய்க் காற்றில் கலந்துவிட்டது.

இவ்விதமே, சூரிய உஷ்ணத்தி னால் கடல், ஆறு, ஏரி ஆகிய இவை களில் உள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. வெயிற் காலத்தில் ஏரி, குளம் முதலியவை வறண்டு போவ தற்கு இது ஒரு முக்கிய காரணம்.

பயிற்சி

1. ஆறு, குளங்களிலுள்ள தண்ணீர் வற்றிப் போவதின் காரணம் என்ன?

2. அடுப்பின் மீது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டுக் காய்ச்சினால் மேலே என்ன தெரியும்? அதற்குப் பெயர் என்ன?

ஆறும் பாடம்

மழையும் அதன் செய்கையும்

ஓர் கெட்டிலில் தண்ணீர் ஊற்றி, அதை அடுப்பின்மீது வைத்துக்காய்ச்சினுல், கொஞ்ச நேரம் சென்றதும், கெட்டிலின் மூக்கிலிருந்து நீராவி வரும்.



அதற்கு நேராக ஓர் சிலேட்டைப் பிடியுங்கள். கொஞ்ச நேரம் பொறுத்துச் சிலேட்டைக் கவனித்துப்பார்த்தால், அதில் துளி துளியாகத் தண்ணீர் காணப்படும். இந்தத் தண்ணீர் எங்கிருந்து வந்தது? கெட்டிலிலுள்ள தண்ணீர் நீராவியாக மாறிற்று அல்லவா? சிலேட்டைத் தொட்டால் அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். ஆகையால் குளிர்ச்சியான சிலேட்டில் நீராவி பட்டவுடன் அது தண்ணீர்த் துளிகளாக மாறி விட்டது.

அதேமாதிரி சூரியனுடைய உஷ்ணத்தினுல் ஆறு, ஏரி, கடல் ஆகிய இவைகளில் உள்ள தண்ணீர் நீராவியாக மாறி, மேலே சென்று மேகமாக மாறுகிறது. மேகங்கள் ஆகாயத்தில் வேகமாகச் செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இதற்குக் காரணம் அவை காற்றினுல் அடித்துக்கொண்டு போகப் படுவதே யாகும். அவை மேலே செல்லும் பொழுது அவைகளின் மேல் குளிர்ந்த காற்றுப் படுகிறது. அப்பொழுது, அவை மழையாகப் பூமியில் விழுகின்றன.

மலையுச்சிகளும் மர மடர்ந்த காடுகள்உள்ள இடங்களும் குளிர்ச்சியாக இருக்கும். ஆதலால் அங்கே மழை அதிகமாகப் பெய்கிறது. இப்படி விழும் மழையை ஓர் கருவியினுல் அளப்பது வழக்கம். அக்கருவிக்கு



மழை மானி

'மழை மானி' என்று பெயர். அப்படி அளந்து, ஓர் இடத்தில் இவ்வளவு அங்குலம் மழை பெய்கிறது என்று சொல்லுவ துண்டு. அதையே சிலர் இவ்வளவு "சுழி" அல்லது "செவி" மழை என்றும் சொல்லுவார்கள்.

பூமியின் மேல் மழையாக விழும் தண்ணீர் என்னவாகிறது? மழை நின்றவுடன் நாம் வெளியே சென்று பார்த்தால் இதை யறியலாம். பள்ள

மாயிருக்கும் இடங்களில் தண்ணீர் தேங்கிச் சிறு குட்டைகளாகக் காணப் படுகிறது. மேட்டுப் பிரதேசங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் பள்ளங் களை நோக்கிச் சிறு கால்வாய்களாக ஓடுகிறது. அப்படி ஓடும் பொழுது வழியிலுள்ள மண் முதலியவைகளை அறுத்துச் செல்வதால், தண்ணீர் ஓடுமிடம் சற்றுப் பள்ளமாகி விடுகி றது. பல சிறு கால்வாய்கள் ஒன்ருகச் சேர்ந்து ஓர் பெரிய கால்வாயாக ஓடு கிறது. இரண்டு கால்வாய்கள் ஒன்று சேருமிடத்தில், தண்ணீர் வற்றிய வுடன் விசிறிபோல் ஓர் மணல் மேடு இருப்பதைக் காண்கிருேம். இங்குக் கால்வாய் பல பிரிவுகளாகப் பிரிகின் றது. இதற்கு "டெல்டா" என்றுபெயர்.

மழை நமக்கு அதிக உபயோக மானது. மழையினுல் ஆறு, குளங் கள் ஆகிய இவைகளில் தண்ணீர் நிறைகிறது. அத் தண்ணீர் பயிர் செய்ய உபயோகப் படுகிறது. பயிர்த் தொழில் விருத்தி யடைந்தால் ஜனங் கள் சந்தோஷமாக வாழ முடியும். மழையினுல் நமக்குச் சாப்பிடுவதற் கும், குளிப்பதற்கும் தண்ணீர் கிடைக் கிறது.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—மழை பெய்தவுடன் குழந்தைகளை வெளியே அழைத்துச் சென்று, மேலே சொன்ன விஷ யங்களை விளக்கிக் காட்டவும்).

பயிற்சி

1. மேகம் என்பது என்ன ?
2. மழை எவ்வாறு உண்டாகிறது ?
3. தண்ணீர் எவ்விதம் ஓடுகிறது ?
4. மழையை எந்தக் கருவியினுல் அளக்கிருேம் ?
5. டெல்டா என்ருல் என்ன ?
6. மழையினுல் நமக்கு என்ன உப யோகம் ?

ஏழாம் பாடம்

கடலும் கடற் பிரயாணமும்

கடல் என்பது ஓர் பெரிய நீர் நிலை. இது எல்லா நாடுகளையும் சுற்றி வியாபித்திருக்கிறது. இதன்



எதிர்க்கரை நம் கண்ணுக்குத் தெரிவ தில்லை. இதிலிருக்கும் தண்ணீர் அதிக உப்பாக இருக்கும். எனவே அதை நாம் சாப்பிடவாவது, பயிர் களுக்குப் பாய்ச்சவாவது முடியாது. சில இடங்களில் இத்தண்ணீரைப் பாத்திகளில் பாய்ச்சி, பல தினங்கள் அப்படியே விட்டு வைக்கிருர்கள். சூரிய வெப்பத்தினுல் தண்ணீர் ஆவி யாகப் போன பிறகு, பாத்தியில் உப்புத் தங்கிவிடுகின்றது. இதை உடைத் துக் கோணிகளில் கட்டி, கடை களுக்கு அனுப்புகிருர்கள்.

கடல் அதிக ஆழமாக இருப்ப தால், அதன் தண்ணீர் நம் கண் ணுக்கு நீல நிறமாகத் தோன்று கிறது. கடற்கரை பெரும்பாலும் மணற் பாங்கானது கரையின் மீது எப்போதும் அலைகள் மோதிக்கொண் டே இருக்கின்றன. அதனுல் கடற் கரை அரிக்கப்பட்டு, வளைகுடா, விரி குடா, தீவு, பூசந்தி, ஜலசந்தி முதலி யன உண்டாகின்றன.

கடலில் பலவித மீன்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப் பிடிப்பதற்காக, செம்படவர்கள் சிறு



படகு

படகுகளில் ஏறிக்கொண்டு கடலில் வெகு தூரம் செல்கிறார்கள்; சில சமயங்களில் பல மரத் துண்டுகளை ஒன்றாகக் கட்டி, அவைகளிலும் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இதற்குக் 'கட்டு மரம்' என்று பெயர்.



கட்டுமரத்தில் ஏறி மீன் பிடித்தல்

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஜனங்கள் செல்லுவதற்கும், சாமான்களை ஏற்றிச் செல்லுவதற்கும் கப்பல்கள் உபயோகப்படுகின்றன. முற்காலங்களில் கப்பல்க



பாய்க் கப்பல்

ளில் பெரிய பாய்மரங்களைக் கட்டுவார்கள். காற்று, பாய்களின்மேல் வீசும் போது கப்பல் நகர்ந்து செல்லும். ஆனால் இதில் பிரயாணம் செய்வோர் விரும்பிய இடங்களை அடைவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும்.

இக்காலத்தில் ரயில் வண்டிகள் நீராவியினால் செல்வதுபோல், கப்பல்களும் நீராவியினால் செல்கின்றன. இதோ பாருங்கள் நீராவிக் கப்பல். இதனால் அதி சீக்கிரம் பிரயாணம் செய்ய முடிகின்றது.



நீராவிக் கப்பல்

இப்பொழுது நமது தேசத்துக்கு அயல் நாடுகளிலிருந்து வரும் சாமான்கள் நீராவிக் கப்பலிலேயே வருகின்றன. நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு அனுப்பும் சாமான்களும் இதன் மூலமாகவே அனுப்பப்படுகின்றன.



துறைமுகம்

கடற்கரை ஓரமாக அதிக ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடத்

திற்குத் துறைமுகம் என்று பெயர். இவ்விடத்தில் கப்பல்கள் வந்து தங்குவதற்கும், அதில் சாமான்கள் ஏற்றுவதற்கும், ஜனங்கள் ஏறுவதற்கும், அதிலிருந்து ஜனங்கள் இறங்குவதற்கும், சாமான்கள் இறக்குவதற்கும் வசதியாகத் துறைமுகம் கட்டப்பட்டிருக்கிறது. கடலில் உண்டாகும் பெரிய அலைகள் துறைமுகத்திற்குள் வாரா. புயல் காற்றினால் கப்பல்களுக்குச் சேதமும் உண்டாகாது. எனவே இங்கு வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது.



தீப ஸ்தம்பம்

இரவில் கப்பல்கள் பிரயாணம் செய்யும்போது துறைமுகம் தெரிவதற்காக, தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறார்கள். இரவு நேரங்களில் அவைகளில் விளக்குகள் பிரகாசமாக எரிகின்றன.

கடலின் மத்தியிலும் சில இடங்களில் பாறைகள் இருக்கின்றன. கப்பல்கள் அவைகளில் மோதினால் உடைந்து போகுமல்லவா? ஆகவே இரவு நேரங்களில் பாறைகள் இருப்பது கப்பலோட்டிகளுக்குத் தெரிவதற்காக, அப்பாறைகளிலும் தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறார்கள்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கடல், துறைமுகங்கள், தீபஸ்தம்பங்கள், கட்டுமரம், பாய்மரக் கப்பல், நீராவிக் கப்பல், அக்கப்பலின் உட்பாகம், கப்பலில் சாமான்கள் ஏற்றுதல், இறக்குதல் முதலிய படங்களைச் சேகரித்துப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்).

பயிற்சி

1. கடலில் உள்ள தண்ணீர் நாம் சாப்பிடவும் வயல்களுக்குப் பாய்ச்சவும் உபயோகமாவதில்லை; ஏன்?

2. கடலிலிருந்து உப்பு எப்படிச் செய்கிறார்கள்?

3. முற்காலத்தில் கப்பல்கள் எப்படிப் பிரயாணம் செய்தன? இக்காலத்தில் எப்படிப் பிரயாணம் செய்கின்றன?

4. துறைமுகம் என்றால் என்ன?

5. தீபஸ்தம்பங்களின் உபயோகம் என்ன?

எட்டாம் பாடம்

கிராமமும் நகரமும்

(இரண்டு பிள்ளைகளுக்குள் சம்பாஷணை)

சீனிவாசன்:- கோபாலா, இவ்வருஷம் கோடை விடுமுறைக்கு நீ கட்டாயம் எங்கள் ஊருக்கு வரவேண்டும்.

கோபாலன்:—உங்கள் ஊருக்கா! அது சிறு கிராமமாயிற்றே. அங்கு விநோதம் ஒன்றும் இருக்காதே; எப்படிப் பொழுது போகும்?

சீ:—ஒகோ! நீ அவ்விடம் ஒரு தடவை வந்து பார்த்தால், பிறகு அதன் அருமையை யறிந்து கொள்வாய். எங்கள் கிராமம் உங்கள் நகரத்தைவிட மிகவும் சிறந்ததே.

கோ:—அடேயப்பா! உங்கள் கிராமத்தில் அப்படிச் சிறந்தவைகள் என்ன இருக்கின்றன? எங்கள் நகரத்தைப் பார். எவ்வளவு பெரிய வீடுகள்! விசாலமான தெருக்கள், எத்தனை விதமான வாகனங்கள்! ஒற்றை

மாட்டுவண்டி, சைக்கில்வண்டி, ஜட்கா வண்டி, கோச்சு வண்டி, மோட்டார் கார், மோட்டார் பஸ்ஸுகள் இருக்கின்றனவே! சற்று நேரம் இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பொழுது போய் விடுமே!



கிராமம்

சீ:—எங்கள் கிராமத்தில் இவை இல்லை தான். கிராமத்திலுள்ளவர்களுடைய தொழில் விவசாயம் மட்டும்தான். அவர்களுக்கு வருமானம் குறைவு. அவர்கள் ஏழைகள்; சிறுவீடுகள்தான் கட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனாலும் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள பெரிய வீடுகளுக்குப் பதிலாகக் காற்றோட்டமாயும் ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டும் கட்டப்பட்டுள்ள பல சிறு வீடுகள் இருக்கின்றன. தெருவில் மாட்டு வண்டிகள் மட்டும் தான் செல்கின்றன. ஆனால் இவை உங்கள் நகரத்து வாகனங்களைப் போல, சதா ஓடிக்கொண்டு சத்தத்தையும், புழுதியையும் கிளப்பி விட்டுத் தேக சுகத்தைக் கெடுக்கவில்லையே!

கோ:— எங்கள் நகரங்களில் தெருக்கள் எவ்வளவு சுத்தமாயிருக்கின்றன தெரியுமா? கிராமங்களில் சுகாதார முறைகளை யனுசரிக்காமல், கண்ட இடங்களில் குப்பை, கூளங்களைப் போட்டு, அசுத்தமாக்கி விடுகிறார்களே.

சீ:—கிராமங்களில் சுகாதாரக் குறைவு சற்று இருந்தது வாஸ்தவமே. ஆனால் ஜனங்கள் இப்பொழுது சுகாதார மின்மையின் தீங்குகளைத் தெரிந்து கொண்டு, தக்க முயற்சிகள் எடுத்து வருகிறார்களே. துரைத்தனத்தாரும் இப்பொழுது கிராம முன்னேற்றத்திற்காகப் பலவாறு பாடுபட்டு வருகின்றனர். ஆகையால் கூடிய சீக்கிரம் கிராமங்கள் இவ்விஷயத்தில் சீர் திருத்தமடைந்துவிடும். தவிர, கிராமங்களில், அழகான பயிர் பச்சைகளையும், சூரிய உதயம், அஸ்தமனம் முதலிய காட்சிகளையும், பக்ஷிகள் இனிமையாகப்பாடுதல் முதலிய இயற்கையழகையும் அனுபவிக்கலாமே. நகரங்களில் இது முடியுமா?



நகரம்

கோ:— நகரங்களில் இயற்கையழகு இல்லாவிட்டால் செயற்கையழகு இருக்கின்றதே. சாயங்கால

நேரத்தில் காற்று வாங்க, "பார்க்" என்ற சிங்காரத் தோட்டங்கள் இருக்கின்றனவே. அவற்றில் "ஒலி பரப்பி" என்ற விசித்திரமான கருவியமைத்து, பல இடங்களிலிருந்து இனிமையான சங்கீதம், பல நாடுகளிலிருந்து வர்த்தமானங்கள், விலைவாசிகள் ஆகிய இவற்றைக் கேட்க வசதி செய்திருக்கிறார்களே! இரவு நேரங்களில் மின்சார சக்தியினால் விளக்குகள் ஏற்றியிருப்பதைக் காண வெகு அழகாயிருக்குமே! சந்தோஷமாகப் பொழுது போக்கச் சினிமா, டிராமா ஆகிய இவைகளும், குடிக்க நல்ல தண்ணீர்க் குழாய்களும், அறிவை விருத்தி செய்து கொள்ள உயர்தரக் கலா சாலைகள், வாசக சாலைகள் முதலியனவும் இருக்கின்றனவே. தவிர நோயாளிகளுக்காக வைத்திய சாலைகளும், ஜனங்கள் வழக்குகளைத் தீர்க்கக் கச்சேரிகளும் இருக்கின்றன.

சீ:—வாஸ்தவமே. ஆனால் மின்சார விளக்குகளின் அதிக வெளிச்சத்தாலும், சினிமா காட்சிகளைப் பார்ப்பதாலும் சீக்கிரம் கண்கள் கெட்டுவிடுகின்றனவே. எங்கள் கிராமங்களில் காலை, மாலை வேளைகளில் வயற் புறங்களில் உலாவி, பசுமையான பயிர், செடி முதலியவைகளைப் பார்ப்பதால் கண்ணுக்குக் குளிர்ச்சியும், உடம்பிற்கு ஆரோக்கியமும் ஏற்படுகின்றனவே.

கோ:—நகரத்திலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கிறார்களே. கிராமத்தவர்கள் வருஷத்தில் பல நாட்களில் சோம்பலாகக் காலங் கழிக்கிறார்களே! நகரத்தவர்கள் கிராமத்தவர்களுக்கு வேண்டிய துணிகள், கண்ணாடிச் சாமான்கள், புத்தகங்கள் முதலியன செய்து அனுப்பா விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்?

சீ:—பயிரிடும் நாட்களில் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய எல்லோரும் கிராமங்களில் அதிக சுறுசுறுப்பாயிருக்கிறார்களே. மற்ற நாட்களிலும் அவர்கள் ஏதாவது ஒரு தொழிலை நடத்தும்படி சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள். உங்கள் நகர வாசிகளுக்கு வேண்டிய ஆகாரம் முக்கியமாகக் கிராமங்களி லிருந்து வருகிறதென்பதை நீ மறக்கக் கூடாது. மேலும், நீங்கள் துணிகள் நெய்யப் பஞ்சும் கிராமங்களிலிருந்தே வருகிறது. எனவே, நாங்கள் உழைக்கா விட்டால் நீங்கள் வாழ முடியாது. மேலும் நாள் முழுதும் வெளிகளில் உழைத்து, சுத்தமான காற்றையும், சாதாரண ஆகாரத்தையும், சுத்த நீரையும் உட்கொண்டு கிராம வாசிகள் நோயற்று எவ்வளவு பலசாலிகளாயிருக்கிறார்கள்! நகர வாசிகள் வீடுகளிலேயே அடைபட்டு, புழுதியையும், சாக்கடை நாற்றம் கலந்த காற்றையும், பலவித ஆகாரங்களாகிய காப்பி, தேயிலை முதலியவற்றையும் உட்கொண்டு, நோய்வாய்ப்பட்டுப் பொதுவாகப் பலவீனர்களா யிருக்கின்றனரே தெரியாதா?

கோ:—வாஸ்தவமே. யோசிக்குமிடத்து, கிராமமும் நகரமும் வெவ்வேறு விதங்களில் சிறந்தவைகளே. தேசம் முன்னேற்ற மடைய ஒன்றுக் கொன்று ஒத்துழைத்தல் அவசியமே. நான் விடுமுறை நாட்களில் அவசியம் உன்னுடன் கிராமத்திற்கு வந்து, அங்குள்ள காட்சிகளைக் கண்டு களிக்கிறேன். வந்தனம்.

சீ:—சந்தோஷம். வந்தனம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கிராமம், நகரம் ஆகிய இவற்றைக் குறித்துப் பிள்ளைகளை அதிகமாகச் சம்பாஷணை செய்யும்படி செய்யவேண்டும்).

பயிற்சி

1. கிராமத்தில் வசிப்பவர்களின் முக்கியமான தொழில் யாது?

2. பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்லு.

3. கிராமவாசிகளின் வீடு எவ்வாறு உள்ளது?

4. பட்டணத்தில் என்னென்ன வண்டிகளைக் காணலாம்?

ஒன்பதாம் பாடம்

எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன?

நகரங்களில் உள்ள ஜனங்களின் முக்கியமான தொழில்கள் வியாபாரமும் பலவிதக் கைத்தொழில்களும் ஆகும்.

சாதாரணமாக, பல சாலைகள், இருப்புப் பாதைகள் சந்திக்குமிடத்தில் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் பல திக்குக்களிலிருந்தும், ஜனங்கள் வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் அங்கு வந்து கூடுகின்றனர்.

கடற்கரைக்கு அருகில் ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுகின்றன என்று படித்தோமல்லவா? அங்கு வெளி நாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து சேருவதால், வியாபாரம் விருத்தியடைகிறது. எனவே அவ்விடங்களிலும் நகரங்கள் ஏற்படுகின்றன.

ஆற்றங்கரைகளிலும் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் இப்பிரதேசம் செழிப்பா யிருப்பதோடு, குடிப்பதற்குத் தண்ணீர் சுலபமாகக் கிடைக்கிறது. போக்கு வரவு மார்க்கங்களும் சுலபமாயிருக்கும்.

பெரிய கோயில் முதலியவைகள் உள்ள புண்ணிய ஸ்தலங்களும் நகரங்களாக விருத்தி யடைகின்றன. ஏனென்றால் சுவாமி தரிசனம் செய்யவும் திருவிழாக்கள் பார்க்கவும் ஜனங்கள் அங்கு வந்துகொண்டே யிருப்பார்கள்.

பல கைத்தொழில்கள் நடக்குமிடங்களும் பெரிய நகரங்களாக ஆகின்றன.

பயிற்சி

1. நகரங்கள் எங்கே உண்டாகின்றன?

2. துறைமுகங்களில் நகரங்கள் உண்டாவது ஏன்?

3. புண்ணிய ஸ்தலங்கள் நகரங்கள் ஆவது ஏன்?

பத்தாம் பாடம்

கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்

கிராமத்தைச் சுற்றிப் புல்வெளிகளும் வயல்களும் விசேஷமாக இருக்கின்றன அல்லவா? இதனால் கிராமத்தில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் பயிரிடுதல், ஆடு மாடுகள் மேய்த்தல் முதலிய தொழில்களை நடத்துபவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையும் ஆடம்பரமில்லாதது. பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கலப்பை முதலியவை

செய்யத் தச்சர்களும், மண்வெட்டி, அரிவாள் முதலியவைகள் செய்யக் கருமார்களும் இருப்பார்கள். இவர்களைத் தவிர, நாவிதர்கள், வண்ணார், தட்டார், குயவர் ஆகிய இவர்களும் இருப்பார்கள். இவர்களின் தொழில்கள் என்ன? சில கிராமங்களில் துணி நெய்யச் சேணியர்களும் இருப்பார்கள். நிலத்தை உழுது நாற்று நடுங்காலத்திலும், அறுவடைக் காலத்திலும் அவர்களுக்கு வேலை அதிகம். மற்ற நாட்களில் அவர்களுக்கு அதிக வேலை கிடையாது. கிராம தேவதைகளின் திருவிழாக் காலத்திலும் சங்கராந்தி (பொங்கல்) காலத்திலும் அவர்கள் அதிக உற்சாகமும் சந்தோஷமுமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நகரங்களில் வசிப்பவர்கள் பல தொழில்களை நடத்துபவர்களாக இருக்கிறார்கள். சிலர் ஆபீசுகளில் உத்தியோகஸ்தர்களாகவும், சிலர் வியாபாரிகளாகவும், சிலர் பெரிய கைத்தொழில்களை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். சிலர் ஹோட்டல்கள் வைத்தும், சிலர் வண்டி, மோட்டார் ஆகிய இவற்றை ஓட்டியும், சிலர் தையல் வேலைகள் செய்தும் பிழைக்கிறார்கள். நகரத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ஆடம்பர வாழ்க்கையையே நடத்துபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எக்காலத்திலும் பொதுவாகச் சுறுசுறுப்புள்ளவர்கள்.

பயிற்சி

1. கிராமத்தில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?
2. நகரங்களில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?
3. நகரவாசிகள் எவ்வித வாழ்க்கையுள்ளவர்கள்?



பதினோராம் பாடம்

உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்

உங்கள் ஊரைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன அல்லவா? இவற்றில் பலவிதமான பயிர்கள் உண்டாகின்றன. நெல், வாழை, கரும்பு முதலியன விளையும் நிலத்திற்கு நன்செய் நிலமென்றும், கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவை விளையும் நிலத்திற்குப் புன்செய் நிலமென்றும் பெயர். நன்செய் நிலங்களுக்குச் சத்து உண்டாக்கச் சாம்பல், குப்பை, சாணி, தழைகள் முதலியவைகளை எருக்களாகப் போடவேண்டும். ஆறுகள், ஏரிகள்,

செங்கற்பட்டு ஜில்லாவின் விளை பொருள்களும், அவைகள் பயிர் செய்யப்படும் மாதங்களும்

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்டு	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்
நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	நெல்	* நெல்	நெல்	* நெல்	நெல்
கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு			கேழ்வரகு	* கேழ்வரகு	* கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு	கேழ்வரகு
சோளம்	சோளம்	சோளம்				சோளம்	சோளம்	* சோளம்	* சோளம்	சோளம்	சோளம்
கம்பு	கம்பு	கம்பு				* கம்பு	கம்பு	* கம்பு	கம்பு	கம்பு	கம்பு
வரகு	வரகு	வரகு				வரகு	வரகு	* வரகு	வரகு	வரகு	வரகு
நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை		நிலக்கடலை		* நிலக்கடலை	* நிலக்கடலை	நிலக்கடலை	நிலக்கடலை		நிலக்கடலை
எள்ளு	எள்ளு	எள்ளு	எள்ளு	எள்ளு	எள்ளு	* எள்ளு	எள்ளு	எள்ளு			எள்ளு
						கொள்ளு	கொள்ளு	கொள்ளு	* கொள்ளு	கொள்ளு	

* இக்குறிப்புள்ளவை அம்மாதங்களில் விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுகின்றன

குளங்கள், கிணறுகள் ஆகிய இவைகளிலிருந்து, கால்வாய்கள் வழியாக வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நன்செய்ப் பயிர்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் வேண்டும். சாரமுள்ள களிமண் பூமியில் நன்செய்ப் பயிர்கள் விசேஷமாக உண்டாகின்றன.

புன்செய் நிலங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, எள், உளுந்து, பயறு, துவரை முதலிய தானியங்கள் விளைகின்றன. இவைகள் சாதாரணமாக மேட்டுப்பாங்கான இடத்தில் பயிரிடப்படுகின்றன. இவைகளுக்குத் தண்ணீரும் அதிகமாக வேண்டியதில்லை. செம்மண், மணல் கலந்த மண்ணில் இவைகள் விசேஷமாகப் பயிராகின்றன. கம்பு, சோளம், கேழ்வரகு ஆகிய இவைகள் ஏழை ஜனங்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றன. நிலக்கடலை, எள் ஆகிய இவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்.

நமது ஜில்லாவில் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, வரகு, சாமை ஆகிய தானியங்களும், நிலக்கடலை, எள்ளு ஆகிய எண்ணெய் வித்துக்களும், பயறுகளும், கரும்பு, கொள்ளு, புகையிலை முதலியவைகளும் பயிர் செய்யப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் பயிர் செய்யப்படும் மாதங்களின் விவரங்களை 14ம் பக்கத்திலுள்ள அட்டவணையிற் காண்க:—

பயிற்சி

1. புன்செய்ப் பயிர்கள் எவை? நன்செய்ப் பயிர்கள் எவை?
2. உங்கள் கிராமத்தில் என்னென்ன தானியங்கள் விளைகின்றன?
3. நன்செய் விவசாயத்துக்குச் செய்ய வேண்டியதென்ன?


ஒற்றை மாட்டு வண்டி


இரட்டை மாட்டு வண்டி


குதிரை வண்டி


மோட்டார்


மோட்டார் பஸ்


மோட்டார் லாரி

பன்னிரண்டாம் பாடம்

போக்கு வரவு மார்க்கங்கள்

சாதாரணமாக ஒரு கிராமத்திலிருந்து, சமீபத்திலுள்ள மற்றொரு கிராமத்திற்குப் போகவேண்டியிருந்தால், நடந்து செல்லுகிறோமல்லவா? இப்படியே ஜனங்கள் நடந்து நடந்து பாதை தேய்ந்து போகிறது. இதற்கு ஒற்றையடிப் பாதை என்று

பெயர். சற்றுத் தூரத்திலுள்ள கிராமத்துக்குப் போகவேண்டியிருந்தால் ஒற்றை மாட்டு வண்டியிலாவது, இரட்டை மாட்டு வண்டியிலாவது போகிறோம். வண்டிகள் போவதற்குச் சாலைகள் போட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் கிராமங்களில் மண் சாலைகளே போடப்பட்டுள்ளன.

நகரங்களில் மாட்டுவண்டிகளைத் தவிர, குதிரை வண்டிகளையும் காண்கிறோம். இவைகளைத் தவிர, மோட்டார் வண்டிகளும் இருக்கின்றன. மோட்டார் வண்டிகளில் பல மனிதர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் பஸ்களும், சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகளும் இருக்கின்றன. இங்கே கப்பிகளாலும், கற்களாலும் சாலைகள் கெட்டியாகப் போடப்பட்டுள்ளன.

விரைவில் அதிக தூரம் பிரயாணம் செய்ய ரயில் வண்டிகள் இருக்கின்றன. நீங்கள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறீர்களா? ரயில் வண்டிகள் ஒரே சமமாகவுள்ள தரையில் போடப்பட்டிருக்கும் நீண்ட இருப்புப் பாதைகள்மேல் நீராவியின் உதவியால் அதிவேகமாக ஓடுகின்றன. ஓடும் சக்தியுள்ள இயந்திரம் இருக்கும் வண்டிக்கு எஞ்சின் என்று பெயர்.

ஆறுகளில் வெள்ளம் வரும்போது சௌகரியமாய்ப் பிரயாணம் செய்வதற்குப் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் செல்லும் பொழுது மத்தியில் கடல் இருந்தால், அதைக் கப்பலால் கடந்து செல்கிறோம்.

இக்காலத்தில் அதி வேகமாக வெகு தூரங்களுக்குச் செல்ல ஆகாய விமானங்கள் இருக்கின்றன. நீங்கள் ஆகாய விமானம் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் ஊருக்குமேல் எப்



ஆகாய விமானம்

பொழுதாவது ஆகாய விமானம் பறந்து செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? ஆகாய விமானங்கள் மணிக்கு நூறு மைல் வேகத்துக்கு மேல் பிரயாணம் செய்கின்றன.



தபால் ஆபீஸ்

நாம் நம் சொந்தக்காரர்களுக்காவது, நண்பர்களுக்காவது சமாசாரம் தெரிவிக்க வேண்டியிருந்தால், கடிதம் எழுதி, அதற்குத் தகுந்த தபால் பில்லை ஒட்டி, விலாசம் எழுதி, தபால் பெட்டியில் போடுகிறோம். பிறகு இரண்டொரு தினங்களில் அது குறிப்பிட்ட விலாசதாருக்குப் போய்ச் சேருகிறது. அதிக அவசரமான சமாசாரமாயிருந்தால் அதைத் தந்தி மூலம் தெரிவிக்கலாம்.

பயிற்சி

1. போக்குவரவு மார்க்கங்கள் எவை?
2. போக்குவரவுக்குரிய சாதனம் எவை?
3. தபாலாபீஸின் உபயோகம் என்ன?
4. சாமான்கள் வெளியூர்களுக்கு எப்படி அனுப்பப்படுகின்றன?

பதின்மூன்றும் பாடம்

சந்தை கூடுமிடம்

ஒவ்வொரு கிராமங்களிலும் அங்கிருக்கும் ஜனங்களுக்குத் தேவையான எல்லாப்பொருள்களும் கிடைக்கின்றனவா? இல்லை. ஆகையால்

சந்தை

அவர்களுக்குத் தேவையான பொருள்களை வேறு கிராமங்களிலிருந்தாவது, நகரங்களி லிருந்தாவது வரவழைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. அதே சமயத்தில் அவர்கள் தங்கள் கிராமத்தில் அதிகமாயுள்ள பொருள்களை வேறு கிராமத்தாருக்கு விற்று விடுகிறார்கள். இம்மாதிரி ஒவ்வொரு வரும் தங்களுக்குத் தேவையான பொருள்களுக்காகப் பல கிராமங்களுக்குச் செல்வதைவிட, பல கிராமத்தவர்கள் ஓர் பொதுவான இடத்திற்குத் தங்கள் பொருள்களை எடுத்து வந்தால், அவரவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அங்குச் சுலபமாக வாங்கிக் கொள்ளலாம் அல்லவா? இம்மாதிரியாக விற்பவர்களும் வாங்குபவர்களும் கூடுமிடத்திற்குச் 'சந்தை' என்று பெயர்.

சந்தை கூடுமிடம் பல கிராமங்களுக்கு மத்தியில் இருந்தால், ஜனங்கள் நான்கு பக்கங்களி லிருந்தும் வந்து சுலபமாகக் கூடுவார்கள். சந்தை கூடுமிடம் சாதாரணமாகப் பல ரஸ்தாக்கள் கூடுமிடமா யிருப்பதால், வண்டிகளும் மனிதர்களும் சுலபமாகப்போகவரக்கூடும். அநேக முக்கியமான கிராமங்களில் வாரத்துக்கு ஒரு முறை சந்தை கூடுகிறது.

சந்தைகளில் அவ்வூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் உணவுப் பொருள்கள், காய், கறி, பழங்கள், சட்டி, பானைகள், துணிகள், ஆடு, மாடுகள் முதலியவைகளும் விற்கப்படும். கிராமத்தவர்கள் தாங்கள் கொண்டு போகும் சாமான்களைச் சந்தையில் விற்று விட்டுத் தங்களுக்குத் தேவையான பொருள்களைச் சந்தையில் வாங்கிச் செல்லுவார்கள்.

பயிற்சி

1. சந்தை எதற்காகக் கூடுகிறது?
2. அது எந்த இடத்தில் கூடுகிறது?
3. அது கூடுவதால் என்ன பயன்?

பதினான்காம் பாடம்

தொழிற் சாலைகள்

நமக்கு முக்கியமாய்த் தேவையானவை உணவும் உடையு மல்லவா? உணவுப் பொருள்கள் பூமியில் உற்பத்தியாகின்றன. துணிகள் நெய்ய உபயோகமாகும் பருத்தியும் பூமியில் உண்டாகின்றது. சில கிராமங்களில்



கை ராட்டினம்

வீடுகளிலேயே பருத்தியை நூலாக நூற்றுத் துணியாக நெய்கிறார்கள். ஆனால் இம்மாதிரி நெய்யும் துணிகள் எல்லா ஜனங்களுக்கும் போதா அல்லவா? ஆகவே, சில நகரங்களில் இயந்திரங்களின் உதவியால் துணி



நெசவு

கள் அதிகமாக நெய்கிறார்கள். வேறு சில நகரங்களில் நமக்குத் தேவையான பித்தளை, வெண்கலம் முதலியவற்றால் செய்த பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள், கண்ணாடி வகைகள் முதலியவை செய்கிறார்கள். இப்படிப் பட்ட இடங்களுக்குத் தொழிற் சாலைகள் என்று பெயர். பெரிய தொழிற் சாலைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்வார்கள். அங்குச் சாமான்கள் இயந்திரங்களாலேயே செய்யப்



மில்

படுகின்றன. தொழிற்சாலைக்கு வேண்டிய சௌகரியங்கள் சுலபமாகக் கிடைக்கக் கூடிய இடங்களிலேயே தான் தொழிற் சாலைகள் அமைகின்றன. தொழிற் சாலையிலிருந்து சுற்றியுள்ள இடங்களுக்குப் போக்குவரவு மார்க்கங்கள் சுலபமாயிருக்கும்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— பிள்ளைகளை வண்டிப்பேட்டை, தபாலாபீஸ், சந்தை, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன், தொழிற்சாலை ஆகிய இவைகளுக்கு அழைத்துச் செல்லவேண்டும்).

பயிற்சி

1. தொழிற்சாலைகள் என்றால் என்ன? அங்குச் செய்யப்படும் சில சாமான்களைக் கூறுக.
2. மனிதர்களுக்கு முக்கியமானவை என்னென்ன?
3. துணிகள் எதனால் உண்டாகின்றன?
4. அவை எவ்வாறு உண்டாகின்றன?

பதினைந்தாம் பாடம்

படங்களும் பிளான்களும்

பிள்ளைகளே, உங்களுக்கு ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியின் உருவப்படத்தை வரையத் தெரியுமா? ஓர் அடிக் குச்சியை எடுத்துக் கொண்டு அந்தக்கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து கொள்ளுங்கள். நீளம் 3 அங்குலம் என்றும், அகலம் $1\frac{1}{2}$ அங்குலம் என்றும் வைத்துக்கொள்ளுவோம். ஒரு காகிதத்தில் அந்தக் கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் வைத்துப் படத்தில் காட்டியபடி ஒரு படம் வரையுங்கள். இதைப்போலவே உங்கள் புஸ்தகத்தின் நீளத்தையும் அகலத்தையும் அளந்துகொண்டு, அதன் படத்தை ஒரு காகிதத்தில் வரைந்து காட்டலாம்.



ஆனால், இவ்வாறு, மேஜை, கறுப்புப் பலகை, வகுப்பு அறைகளின் உருவங்களை வரைவதெப்படி? அவற்றின் நீள அகலங்களை அப்படியே வைத்துக்கொண்டு, காகிதத்தில் அவற்றின் படங்களை வரைய முடியாது. ஏன்? காகிதத்தைக்காட்டிலும் அந்த வஸ்துக்கள் அதிகப் பெரியவை. ஆனால் அவ்வஸ்துக்களின் நீள அகலங்களைச் சுருக்கி, அவற்றின் படங்களை வரையலாம்.

உதாரணமாக உங்கள் வகுப்பு அறையின் படத்தை வரைவதாக வைத்துக் கொள்ளுவோம். அறையின் நீளம் 30 அடி என்றும், அகலம் 15 அடி என்றும் வைத்துக்கொள். 10 அடிக்கு ஒரு அங்குலமாக 30 அடிக்கு மூன்று அங்குலக்கோடு ஒன்றும், 15 அடிக்கு 1 அங்குலக்கோடு ஒன்றும் எடுத்துக் கொண்டு, ஒரு நீண்ட சதுரம் வரைந்தால் அதுவே உங்கள் வகுப்பு அறையின்படமாகும்.

அடுத்த பக்கத்தில் ஓர் பள்ளிக்கூடத்தின் படம் வரைந்து காட்டப்பட்டிருக்கிறது பார். பள்ளிக்கூடத்தின் நீளம் 94 அடி. அகலம் 76 அடி. உன் அடிக்குச்சியை எடுத்துக்கொண்டு படத்தின் வெளிக் கோடுகளை அளந்து பார். 20 அடிக்கு ஒரு அங்குலமென்று வைத்துக்கொண்டு உன்னுடையபள்ளிக்கூடத்தின் நிலப் படம் வரையப்பட்டிருக்கிறது. இதனுள் நான்கு வகுப்பு அறைகளின் படமும் வரையப்பட்டிருக்கிறது பார். ஒவ்வொரு வகுப்பின் நீளமும் 28 அடி; அகலம் 14 அடி. படத்தில் இவைகள் எத்தனை அங்குலமாகக் காட்டப்பட்டிருக்கின்றன என்று அளந்துபார்.

பள்ளிக்கூடத்திற்குள் செல்லும் பாதையும், வகுப்பு அறைகளுக்குள் செல்லும் வாயில்களும் காட்டப்பட்டிருக்கின்றன. அடிக்குச்சியைக் கொண்டு ஒவ்வொரு வாயிலையும் அளந்து, அதன் உண்மையான அகலத்தைக் கண்டுபிடி. (அடிக்குச்சியில் ஒவ்வொரு அங்குலமும் பத்துச் சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறு பாகமும் படத்தில் இரண்டு அடிகளைக் குறிக்கும்). அறைகளின் சுவர்களில்

ஜன்னல்களும் காட்டப்பட் டிருக்கின்றன பார். அவைகளேயும் அடிக் குச்சியால் அளந்து உண்மையான அளவைக் கண்டுபிடியுங்கள்.

இதைப் போலவே ஒரு கிராமம், தாலூகா அல்லது ஒருஜில்லாப் படத்தையும் ஓர் தகுதியான அளவை வைத்துக் கொண்டு வரைந்துஅதிலுள்ள ஆறுகள், மலைகள், ரயில் பாதை, ரஸ்தா மார்க்கம், முக்கிய ஊர்கள் ஆகிய இவைகளைக் குறிக்கலாம்.

கடல்களைக் குறிப்பதா யிருந்தால் நீல நிறத்தில் குறிக்க வேண்டும். மைதானங்களுக்குப் பச்சை வர்ணமும் மலைகளுக்குப் பழுப்பு வர்ணமும் உபயோகிக்க வேண்டும்.



பள்ளிக்கூடத்தின் படம்

உபாத்தியாயருக்குக் குறிப்பு:-ஜில்லாப் படம் அல்லது ராஜதானிப் படத்தைக் கொண்டு, படங்களுக்குவழக்கமாகஉபயோகப்படுத்தும் (Conventional Colour Scheme) வர்ணங்களைப் பற்றி விபரமாகச் சொல்லவும்.

அடுத்த பக்கத்திலுள்ள ஜில்லாவின் படத்தைப்பாருங்கள். அதன் அடியில் ஸ்கேல் 1 அங்குலத்துக்கு இத்தனை மைல் என்று எழுதப்பட்டிருக்கிறதல்லவா? படத்தில் 1 அங்குல தூரம் அதில் குறித்த அளவு மைல் தூரத்தைக் காட்டும். இதிலிருந்து நமக்கு அப்படத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குள்ள தூரம் எத்தனை மைல் என்று தெரியும். நமது ஜில்லாவின் தாலூகாக்கள் படத்தில் காட்டப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

பயிற்சி

1. ஒரு புஸ்தகத்தின் பிளானை எப்படி நீ வரைவாய்?
2. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமிருந்தால், அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய்?
3. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒருபொதுவான கட்டிடத்தின் பிளானை வரைந்து காட்டு.

செங்கற்பட்டு ஜில்லா பூகோளம்

பதினொரும் பாடம்

எல்லைகள்

பிள்ளைகளே, நீங்கள் வசிப்பது... என்ற ஊர். இம்மாதிரிப் பல ஊர்கள் அடங்கிய பாகத்திற்குத் தாலுகா என்று பெயர். பல தாலுகாக்கள் அடங்கியது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் கொண்டது ஒரு மாகாணம். பல மாகாணங்கள் சேர்ந்தது ஒரு தேசம்.

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இந்தத் தேசத்தின் தென் பாகமாகிய தென் இந்தி



தென் இந்தியாப் படம்

யாவில் சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்.

சென்னை மாகாணம் இந்தியாவின் தெற்கிலும் தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இந்த மாகாணத்தின் கிழக்குப் பாகத்தில் நாம் வசிக்கும் இடத்திற்கு செங்கற்பட்டு ஜில்லா என்று பெயர். இதன் தலை நகர் செங்கற்பட்டு. இப்போது நாம் கற்றுக் கொள்ளப்போவது நமது ஜில்லாவின் பூகோளமே.

பூகோளப் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. எல்லைகள் என்பன ஓர் இடத்தின் நான்கு திக்கிலுமுள்ள இடங்களாம்.

நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். நமது ஜில்லாவுக்குக் கிழக்கே வங்காளக் குடாக் கடலும், தெற்கே தென் ஆற்காடு ஜில்லாவும், மேற்கே வட ஆற்காடு, சித்தூர் ஜில்லாக்களும், வடக்கே நெல்லூர் ஜில்லாவும் எல்லைகளாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்.

ஒரு ஜில்லாவானது பல தாலுகாக்களைக் கொண்டது என்று படித்தோம் அல்லவா? நம் செங்கற்பட்டு ஜில்லாவை ஏழு தாலுகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன :— 1. பொன்னேரி, 2. திருவள்ளூர் 3. ஸ்ரீ பெரும்பூதூர் 4. காஞ்சீபுரம் 5.

சைதாப்பேட்டை 6. செங்கற்பட்டு 7. மதுராந்தகம். இவைகளில் நீங்கள் வசிக்கும் தாலுகா......என்பது.

பயிற்சி

1. நீங்கள் வசிக்கும் தாலுகாவின் எல்லை களிலுள்ள ஊர்களைச் சொல்லுங்கள்.
2. உங்கள் ஊரின் எல்லைகளைக் கூறுங்கள்.
3. உங்கள் ஜில்லாவின் நான்கு திசைகளிலும் உள்ள ஜில்லாக்கள் எவை ?
4. மாகாணம் என்று எதற்குப் பெயர் ?
5. தாலுகா என்று எதற்குப் பெயர் ?

பதினேழாம் பாடம்

இயற்கையமைப்பு, நதிகளும், ஏரிகளும்

சாதாரணமாகப் பூமி எங்கும் மேடு பள்ளமில்லாமல் சம நிலமாக இராது என்பதை நாம் அறிவோம். மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் இவைகள், மனிதர்களால் ஏற்படுத்தப் பட்டவை அல்ல. இயற்கையாகவே ஏற்பட்டவை. ஆகையால் இவைகளை இயற்கையமைப்பு என்று கூறுவது வழக்கம்.

நமது ஜில்லாவின் இயற்கையமைப்புப் படத்தைப் பாருங்கள். அதைக் குறிப்பின் உதவியைக் கொண்டு பார்க்கும்பொழுது மிகச் சில குன்றுகளும், மலைகளுமாய் இருப்பதை அறிவீர்கள். நமது ஜில்லாவில் நிலம் எந்தப் பக்கம் சரிவாக இருக்கிறதென்பதை எப்படி அறிவீர்கள்? ஓர் இடத்தில் தண்ணீரை ஊற்றினல், அது பள்ளமான இடத்தை நோக்கி ஓடுகிறதல்லவா ? அது போல நதிகளும் மேட்டுப் பிரதேசத்தி லிருந்து பள்ளமான இடத்தை நோக்கி ஓடுகின்றன. நமது ஜில்லாப் படத்தில் நதிகள் மேற்கே இருந்து கிழக்கே ஓடுவதாகக் காட்டப்பட் டிருக்கிற தல்லவா ? ஆகையால் இந்த ஜில்லா மேற்கே இருந்து கிழக்கே சரிந்திருப்பதை அறிகிறோம்.

நமது ஜில்லாவில் கடற்கரையை யொட்டி மணல் மேடுகள் இருக்கின்றன. தென் கிழக்கு ஓரமாகச் சில குன்றுகளும் இருக்கின்றன. இம் மேடுகளுக்கு மேற்கே உப்பங் கழிகள் இருக்கின்றன. அதாவது கடலிலுள்ள தண்ணீர் அங்கங்கே தேங்கியிருக்கின்றது. இவைகளை ஒன்று சேர்த்துக்கொண்டு ஓர் நீண்ட கால்வாய் இருப்பதால் இது ஜில்லாவின் வட பாகத்திலிருந்து தெற்காகச் செல்ல அநுகூலமா யிருக்கிறது. இந்த உப்பங் கழிகள் ஓரமாக முட்புதர்களும், பனைமரங்களும் இருக்கின்றன.

I. மலைகள்

இந்த ஜில்லாவில் குன்றுகள் மிகச் சிலவே இருக்கின்றன என்று சொன்னேமல்லவா ? இந்த ஜில்லா ஏறக்குறையச் சமவெளியாகவே இருக்கின்றது. வடமேற்காக இருக்கும் சில குன்றுகளைக் கவனியுங்கள். இவைகளில் முக்கியமானவை காம்பாக்கம் துர்க்கமும், நாகலாபுரம் மலைகளும். படத்தைப் பார்த்து, இவைகள் எந்தத் தாலுகாக்களில் இருக்கின்றன என்று சொல்லுங்கள். இவற்றில் காம்பாக்கம் துர்க்கமே நமது ஜில்லா


செங்கற்பட்டு ஜில்லா
இயற்கை யமைப்பு
ஸ்கேல் 1 அங்—12 மைல்கள்
வ
மே
கி
தெ
நெல்லூர் ஜில்லா
சித்தூர் ஜில்லா
பழவேற்காடு ஏரி
பொன்னேரி
நாகலாபுரம் மலை
ஆரண்ய நதி
குசஸ்தலையாறு
சோழவரம் ஏரி
புழலேரி
திருவள்ளூர்
சைதாப்பேட்டை
சென்னை
கூவம் நதி
கிண்டி குன்று
செம்பரம்பாக்கம் ஏரி
பரங்கிமலை
அடையாறு
பல்லாவரம் குன்று
கூவம் ஏரி
ஸ்ரீபெரும்பூதூர்
தென்னேரி
காஞ்சீபுரம்
வேகவதியாறு
சீவரம் மலை
சிங்கப்பெருமாள் கோவில் மலை
பாலாறு
கொளவாய் ஏரி
திருப்போரூர் மலை
வட ஆற்காடு ஜில்லா
செய்யாறு
செங்கற்பட்டு
திருக்கழுக்குன்றம் மலை
கருங்குழி மலை
பாலாறு
மதுராந்தகம் ஏரி
மதுராந்தகம்
வங்காளக் குடாக்கடல்
குறிப்பு
1000 அடிக்குமேல்
600 அடி
கடல் மட்டம்
தாலூகா எல்லை.
தென் ஆற்காடு ஜில்லா

வில் அதிக உயரமான குன்று. (2500 அடி உயரம்) இவைகளைத் தவிர சைதாப்பேட்டை தாலூகாவில் கிண்டி, பரங்கிமலை, திருநீர்மலை, பல்லாவரம் என்ற இடங்களுக்குச் சமீபத்தில் குன்றுகள் இருக்கின்றன. மேலும், செங்கற்பட்டு தாலூகாவில் திருக்கழுக்குன்றம் மலை, சிங்கப்பெருமாள் கோயில் மலை, திருப்போரூர் குன்று இவைகளும், மதுராந்தகம் தாலூகாவில் திருவையாவூர்க் குன்றும், கருங்குழி, அச்சிறுபாக்கம் குன்றுகளும், காஞ்சிபுரம் தாலூகாவில் பழைய சீவரம் குன்றும் முக்கியமானவை.

2 நதிகள்

நமது ஜில்லாவிலுள்ள நதிகள் மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக் கடலில் விழுகின்றன என்று படித்தோமல்லவா? மழை காலத்தில் வெள்ளம் உண்டு. மற்ற காலங்களில் வறண்டிருக்கும். ஆனால் வறண்ட காலங்களில் ஊற்றுகள் தோண்டி அவைகளிலிருந்து தண்ணீரைக் கால்வாய்கள் வழியே விவசாயத்துக்காக எடுத்துக்கொள்ளுகிறார்கள். கீழ்க்கண்ட ஆறுகள் நமது ஜில்லாவில் முக்கியமானவை :—

(1) பாலாறு :-இது மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகி, வட ஆற்காடு ஜில்லா வழியே பாய்ந்து, காஞ்சிபுரம் தாலூகாவில் நமது ஜில்லாவுக்குள் பிரவேசித்து, கடைசியாகச் செங்கற்பட்டு தாலூகாவிலுள்ள சதுரங்கப் பட்டணத்துக்கருகே கடலில் விழுகின்றது. இது நமது ஜில்லாவில் எந்தெந்தத் தாலூகாக்கள் வழியே செல்கின்றது? இதன் முக்கிய உப நதிகள் செய்யாறும், வேகவதியாறும். செய்யாறு வட ஆற்காடு ஜில்லாவிலும், வேகவதியாறு காஞ்சிபுரம் தாலூகாவிலும் உற்பத்தியாகி, இரண்டு நதிகளும், வாலாஜாபாத்துக் கருகில் பாலாற்றுடன் கலக்கின்றன. இவ்விடத்துக்குத் திருமுக்குடல், அதாவது மூன்று புண்யநதிகள் கூடுமிடம் என்று பெயர்.

(2) அடையாறு :-இது ஸ்ரீபெரும்பூதூர் தாலூகாவிலுள்ள செம்பரம்பாக்கம் என்ற பெரிய ஏரியில் உற்பத்தியாகி, சைதாப்பேட்டை தாலூகாவில் பாய்ந்து, சென்னைக்குத் தெற்கேயுள்ள அடையாறு என்னும் கிராமத்துக்கருகில் கடலில் விழுகிறது.

(3) கூவம் நதி:—(கூப நதி) இது காஞ்சிபுரம் தாலூகாவிலுள்ள கூவம் என்ற ஏரியில் உற்பத்தியாகிக் கிழக்காகப் பாய்ந்து, சென்னபட்டணத்தின் மத்தியில் கடலில் கலக்கின்றது. படத்தைப் பார்த்து, இது எந்தெந்தத் தாலூகாக்கள் வழியே செல்கின்றது என்று சொல்லுங்கள். இதில் ஓர் அணைகட்டிச் செம்பரம்பாக்கம் ஏரிக்குத் தண்ணீரைத் திருப்புகின்றார்கள்.

(4) குசஸ்தலையாறு:-(குடதலையாறு) இது வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள காவேரிப்பாக்கம் ஏரியில் உற்பத்தியாகி, சில சிறு உப நதிகளுடன் சேர்ந்து, நமது ஜில்லாவில் திருவள்ளூர், பொன்னேரி தாலூகாக்கள் வழியே பாய்ந்து, எண்ணூர் என்னுமிடத்துக்கருகில் கடலில் கலக்கின்றது. இதில் ஓர் அணைகட்டித் தண்ணீரைச் செம்பரம்பாக்கம் ஏரி, புழலேரி இவைகளில் தேக்குகிறார்கள்.

(5) ஆரணி நதி :—(ஆரண்ய நதி) இதற்கு நாராயண வனத்தாறு என்ற மற்றொரு பெயரும் உண்டு. இது சித்தூர் ஜில்லாவில் உற்பத்தியாகி, நமது

ஜில்லாவில் திருவள்ளூர், பொன்னேரி தாலூகாக்களுக்கு மத்தியில் எல்லை யாகப் பாய்ந்து, பிறகு பொன்னேரி தாலுகா வழியே சென்று, பழவேற் காடு என்ற ஏரியில் விழுகிறது. இந்த ஏரி கடலுடன் சம்பந்தப்பட்டது.

3. ஏரிகள்

நமது ஜில்லாவில் அநேக ஏரிகள் இருக்கின்றன. ஏரிகளால் நமக்கு என்ன உபயோகம்? இவ்வேரிகளில் மிகப் பெரியது பழவேற்காடு ஏரி. இது எந்தத் தாலூகாவில் இருக் கிறது? இது சுமார் 37 மைல் நீள மும், சில இடங்களில் 3 மைல் அகல மும், சில இடங்களில் 11 மைல் அக லமும் இருக்கிறது. இதில் 6 மைல் நீளமே நமது ஜில்லாவிலும், மிகுதி யான பாகம் நெல்லூர் ஜில்லாவிலும் இருக்கிறது. இதன் நடுவேயுள்ள தீவுகளில் சுண்ணும்பு செய்ய உதவும் கிளிஞ்சல் கிடைக்கின்றது.

இதைத் தவிர முக்கியமான ஏரிகள் ஸ்ரீபெரும்பூதூர் தாலூகாவிலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியும், சைதாப் பேட்டை தாலூகாவிலுள்ள புழலேரி யும் (Red Hills Lake) ஆவன. இவை கள் வயல்களுக்கு நீர் பாய்ச்ச அநு கூலமா யிருக்கின்றன. தவிர புழ லேரியிலிருந்து தண்ணீரைக் குழாய் களின் வழியே சென்னைக்குக்கொண்டு போகிறார்கள். இத் தண்ணீரே அங் குக் குடிப்பதற்கு உபயோகப் படு கிறது.

நமது ஜில்லாவிலுள்ள மற்ற ஏரிக ளாவன. செங்கற்பட்டுக் கருகிலுள்ள கோளவாய் ஏரியும், பொன்னேரி தாலூகாவிலுள்ள சோழவரம் ஏரியும், மதுராந்தகம் தாலூகாவிலுள்ள மது ராந்தகம், கருங்குழி ஏரிகளும், காஞ்சி புரம் தாலூகாவிலுள்ள உத்தரமேரூர் ஏரி, கூவம் ஏரி, தென்னேரி இவை களும், ஸ்ரீபெரும்பூதூர் தாலூகாவி லுள்ள மணிமங்கலம் ஏரியும் முக்கிய மானவை. இவ்வேரிகள் பெரும்பா லும், மழைக் காலத்தில் நீர் நிறைந் தும், மற்ற காலங்களில் வறண்டும் இருக்கின்றன.

மழை

நமது ஜில்லா, பொதுவாகவே சற்று உஷ்ணமானது என்று சொல்ல வேண்டும். ஆனாலும் இந்த ஜில்லா கடற்கரையி லிருப்பதைக் கவனியுங் கள். கடலிலிருந்து குளிர்ந்த காற்று வீசுவதால் கடலையடுத்த பாகங்களில் சற்றுக் குளிர்ச்சியாகவே இருக்கிறது. உள்நாடுகளில் உஷ்ணம் அதிகமாக



இருக்கிறது. பங்குனி மாதம் (மார்ச் 15 தேதி) முதல் ஆவணி மாதம் (ஆகஸ்டு 15 தேதி) வரை நமது ஜில்லாவில் உஷ்ணம் அதிகமாக இருக்கின்றது. எனினும், நமது ஜில்லா வசிப்பதற்கு மிகவும் ஏற்றதே.

பொதுவாக நமது ஜில்லாவிலுள்ள கடற்கரைப் பாகங்களில் சுமார் 51 அங்குலமும், மற்ற பாகங்களில் சுமார் 45 அங்குலமும் மழை பெய்கிறது.

பயிற்சி

1. ஜில்லாப் படத்தைப் பார்த்து, பாலாறு, ஆரணிநதி இவைகள் எந்தத் தாலுகாக்கள் வழியே செல்கின்றன என்று சொல்லுங்கள்.
2. நமது ஜில்லாவில் எப்பக்கம் உயர்ந்த குன்றுகள் இருக்கின்றன?
3. நமது ஜில்லா எப்பக்கம் சரிந்திருக்கிறது? ஏன்?
4. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா தப்பா என்று கூறுக:—
   - i வேகவதியாறு மதுராந்தகம் தாலுகாவில் உற்பத்தியாகிறது.
   - ii புழலேரித் தண்ணீரைச் சென்னைக்குக் குழாய்கள் வழியே கொண்டுபோகிறார்கள்.
   - iii நமது ஜில்லாவில் மிகப் பெரியது பழவேற்காட்டு ஏரி.
5. முன் பக்கத்தில் கொடுத்திருக்கும் படத்தைப் பார்த்து, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை கூறுக:—
   - i எந்தத் தாலுகாவில் மழை அதிகம்?
   - ii எங்கு மழை குறைவு?
   - iii உங்கள் தாலுகாவில் மழை எவ்வளவு அங்குலம் பெய்கிறது?

பதினெட்டாம் பாடம்

தாலுகா, ஜில்லாவிலுள்ள, விளை பொருள்களும் கைத்தொழில்களும்

சாதாரணமாகச் சில இடங்களில் நெல் முதலிய நன்செய்ப் பயிர்கள் நன்றாய் உண்டாகின்றன. வேறு சில இடங்களில் கேழ்வரகு முதலிய புன்செய்ப் பயிர்கள் நன்றாய் உண்டாகின்றன. சில இடங்களில் எந்தப் பயிரும் உண்டாவதில்லை. இவைகளுக்குக் காரணம் அந்தந்த இடங்களில் உள்ள பூமியின் தன்மையே. அதாவது நிலத்தில் அமைந்திருக்கும் மண்ணும், வயல்களுக்கு நீர்பாய்ச்ச ஏற்பட்டிருக்கும் வசதியுமே.

எல்லா இடங்களிலும் மண் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. நமது ஜில்லாவில் கடற்கரை யோரமாக மணல் அதிகமாக இருப்பதால் இங்கு தென்னை, சவுக்கு முதலிய மரங்கள் அதிகமாயிருக்கின்றன. வட பாகத்தில் மணல் கலந்த செம்மண் அதிகம் ஆகையால் இங்குப் புன்செய்ப் பயிர்களே விசேஷம். தெற்குப் பாகமாகிய செங்கற்பட்டு, மதுராந்தகம், காஞ்சிபுரம் தாலுகாக்களில் கறுப்பு நிறமுள்ள கரிசல் மண் பூமியே அதிகம். இம்மண் மிகவும் செழிப்பானதால் இங்கு நன்செய்ப் பயிர்கள் அதிகம்.

பயிர்கள் நன்றாய் வளர்வதற்குத் தண்ணீர் அவசியம் அல்லவா? நமது ஜில்லாவில் வருஷத்துக்கு 53 நாட்கள் தான் மழை பெய்வதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதர நாட்களில் வேறு விதமாய் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். சாதாரணமாக ஆறுகளில் குறுக்கே அணைகள்

போட்டுத் தண்ணீரை ஏரிகளில் நிரப்பி, வருஷம் முழுவதும் வயல்களுக்குப் பாய்ச்சுவது வழக்கம். இவற்றுள் முக்கியமான கால்வாய்க்குக் 'கம்பக் கால்' கால்வாய் என்று பெயர்.



ஆற்று நீர் ஏரி

இந்த ஜில்லாவிலுள்ள ஏரிகளில் சிலவற்றிற்கே ஆறுகளிலிருந்து தண்ணீர் வருகிறது. மற்றவைகள் மழைத்



வானம் பார்த்த ஏரி

தண்ணீரினால்தான் நிரம்புகின்றன. அவைகளை 'வானம்பார்த்த ஏரிகள்' என்று சொல்வார்கள், இவற்றுள் மிகப்பெரியது செம்பரம்பாக்கம் ஏரி. இதன் தண்ணீர் 37 கிராமங்களுக்குப் பாய்கிறது. இதற்குக் கூவம் நதியிலிருந்தும் தண்ணீர் வருகிறது. சோழவரம் ஏரி, புழலேரி இவைகளுக்கு குசஸ்தலையாற்றிலிருந்து கொஞ்சம் தண்ணீர் வருகிறது. மதுராந்தகம் ஏரி, உத்தரமேரூர் ஏரி, கருங்குழி ஏரி, தென்னேரி, வல்லூறு ஏரி இவைகள் இங்குள்ள மற்ற முக்கிய ஏரிகள். நமது ஜில்லாவில் மொத்தம் சுமார் 2500 ஏரிகள் இருக்கின்றன.



ஏற்றம் வைத்த கிணறு

இவற்றைத் தவிர, அநேக இடங்களில் கிணறுகள் வெட்டி ஏற்றம் வைத்து, தண்ணீர் இறைத்துக் கொள்கிறார்கள். ஆறுகளிலும் தண்ணீர் இல்லாத காலத்தில் ஊற்றுக் கால்வாய் வெட்டிப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்.

காடுகள்

நமது ஜில்லாவில் நாகலாபுரம் மலையை யடுத்த பிரதேசத்தில் காடுகள் விசேஷமாக இருக்கின்றன. இவைகளில் பெரிய மரங்கள் உண்டு. இவைகள் பலகைகளாக அறுப்பதற்கும், விறகுக்கும் உபயோகப் படுகின்றன. மரப் பட்டையிலிருந்து சாயமும் காய்ச்சுகிறார்கள். இக்காடுகளில் வயல்களுக்கு எருவாக உபயோகப்படும்


செங்கற்பட்டு ஜில்லா
விளைபொருள்கள்
ஸ்கேல் 1 அங்—12 மைல்கள்
வ
மே
கி
தெ
நெல்லூர் ஜில்லா
நெல்
கரும்பு
பொன்னேரி தாலுகா
கம்பு
வாழை
எள்
காய்கறிகள்
பழங்கள்
சித்தூர் ஜில்லா
கம்பு
கேழ்வரகு
கேழ்வரகு
திருவள்ளூர்
கம்பு
சோளம்
கொள் வெற்றிலை
எள்
நெல்
சைதாப்பேட்டை
வெற்றிலை
சென்னை
நிலக்கடலை
நெல்
நெல்
சோளம்
கரும்பு
கேழ்வரகு
கொள்
ஸ்ரீபெரும்பூதூர்
சோளம்
நெல்
கம்பு
கேழ்வரகு
நெல்
காஞ்சீபுரம்
வங்காளக் குடாக்கடல்
வட ஆற்காடு ஜில்லா
எள்
நெல்
செங்கற்பட்டு
நிலக்கடலை
காய்கறிகள்
காய்கறி
பழங்கள்
கேழ்வரகு
கேழ்வரகு
வெற்றிலை
நிலக்கடலை
நிலக்கடலை
நெல்
மதுராந்தகம்
எள்
கம்பு
சோளம்
கொள்
தென் ஆற்காடு ஜில்லா

தழைகளும், மருந்துக்கு உதவும் மூலிகைகளும் கிடைக்கின்றன.

இக்காடுகளில் பல துஷ்ட மிருகங்களும் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை புலி, சிறுத்தைப் புலி, கழுதைப்புலி, காடி, ஓநாய், குரங்கு முதலியவை. திருவள்ளூர், மதுராந்தகம் தாலூகாக்களில் மான்களும், கடலில் பலவித மீன்களும், முதலைகளும் இருக்கின்றன.

விளைபொருள்கள்

நமது ஜில்லாவில் பலவகையான விளைபொருள்கள் உண்டாகின்றன. நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, வெற்றிலை, வாழை இவைகள் பயிராகின்றன. ஆறு, ஏரிகள் இவைகளையடுத்த பிரதேசங்களில் நன்செய் நிலங்கள் அதிகம். ஏறக்குறைய எல்லாத் தாலூகாக்களிலும் நெல் விசேஷமாக விளைகின்றது. ஆனால் மற்ற தாலூகாக்களைவிட, காஞ்சிபுரம் தாலூகாவில் நெல் அதிகமாக விளைகிறது. பல விடங்களில் கரும்பு பயிரிட்டு அதன் சாற்றிலிருந்து வெல்லம், சர்க்கரை முதலியவை செய்கிறார்கள். பூவிருந்தவல்லி, தொழுவூர், மதுராந்தகம் இவ்விடங்களில் வெற்றிலை ஏராளமாகப் பயிராகின்றது. பொன்னேரி, செங்கற்பட்டு தாலூகாக்களில் வாழை முதலிய பழவகைகளும் பயிராகின்றன.

புன்செய் நிலங்களில் சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை (மணிலாக் கொட்டை), எள், கொள் இவைகள் பயிராகின்றன. திருவள்ளூர் தாலூகாவில் கொள் விசேஷமாகவும், மதுராந்தகம், திருவள்ளூர் தாலூகாக்களில் நிலக்கடலை விசேஷமாகவும், திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுராந்தகம் தாலூகாக்களில் எள் விசேஷமாகவும் விளைகின்றன. மற்ற புன்செய் தானியங்கள் எல்லாத் தாலூகாக்களிலும் கிடைக்கின்றன.

நமது ஜில்லாவில் பல விடங்களிலும், முக்கியமாகக் காஞ்சிபுரம், திருவள்ளூர், பொன்னேரி தாலூகாக்களில் உருசியான காய்கறிகள் பயிரிடுகிறார்கள். இவற்றுள் முக்கியமானவை பாகல், வள்ளிக்கிழங்கு, அவரை, கத்திரிக்காய், பூசணிக்காய், கீரை வகைகள், இஞ்சி, மஞ்சள் முதலியவைகளுமாம். பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம் இவ்விடங்களில் அதிக வாசனையுள்ள பல ஜாதிப் புஷ்பங்களும் கிடைக்கின்றன.

உலோகங்கள்.

நமது ஜில்லாவில் உலோகங்கள் இல்லையென்றே சொல்லலாம். பல விடங்களில் கிடைக்கும் நேர்த்தியான வர்ணக் கற்கள் கட்டடங்கள் கட்ட உதவுகின்றன. பல்லாவரம் குன்றில் கிடைக்கும் சரளைக் கற்கள் சாலைகள் போட உதவுகின்றன. செங்கற்பட்டுக்குத் தெற்கேயுள்ள பொன் விளைந்த களத்தூரில் ஒரு காலத்தில் தங்கம் கிடைத்தாகச் சொல்லுகிறார்கள். அதனாலேயே இவ்வூருக்கு அப்பெயர் வந்தது.

கைத்தொழில்கள்.

நமது ஜில்லாவில் நூற்றுக்கு எண்பது பேருக்குமேல் விவசாயம் செய்தும், ஆடு மாடுகளை வளர்த்தும் ஜீவனம் செய்கிறார்கள். இவைகளுக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் நடக்கிறது. இதில் நூற்றுக்கு இரண்டு பேர் ஈடுபட்டிருக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் விலை உயர்ந்த பட்டுச் சேலைகளும், முகம்மதியர்கள் தரிக்

கும் லுங்கி என்ற வஸ்திரங்களும் ஏராளமாக நெய்கின்றார்கள். இவைகள் நமது தேசத்தில் எல்லா இடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. சைதாப்பேட்டையில் லுங்கிகளும்,



நெசவு வேலை

பொன்னேரித் தாலுகாவிலுள்ள ஆரணியில் மஸ்லின் துணிகளும் நெய்கிறார்கள். காஞ்சிபுரம், சைதாப்பேட்டை இவ்விடங்களில் துணிகளுக்குப் பலவித சாயங்களும் போடுகிறார்கள்.

செங்கற்பட்டில் சிறு கைதிகளுக்காக அரசாங்கத்தார் ஓர் சீர்திருந்தப் பள்ளிக்கூடம் (Reformatory School) ஏற்படுத்தி இருக்கிறார்கள். இங்கு இவர்களுக்குப் பல தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன. இச்சிறு கைதிகள் துப்பட்டி, கைக்குட்டைகள், கம்பளம், பிரம்புச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், பாய்கள் முதலியவை நேர்த்தியாகச் செய்கிறார்கள்.

கடற்கரையிலுள்ள பல இடங்களில் கடல் நீரிலிருந்து ஏராளமாக உப்புச் செய்து, உள் நாட்டுக்கு அனுப்புகிறார்கள். கடற்கரையில் வசிக்கும் சில ஜனங்கள் சவுக்கு மரங்களை வெட்டி, விறகுக்காகப் பல இடங்களுக்கு அனுப்பி ஜீவனம் செய்து வருகிறார்கள். செம்படவர்கள் மீன் பிடித்து ஜீவனம் செய்து வருகிறார்கள்.

சைதாப்பேட்டை தாலுகாவில் தோல் பதனிடும் சாலைகள் பல இருக்கின்றன. சைதாப்பேட்டையை அடுத்த கிண்டியில் சுருட்டுகள் செய்கிறார்கள். இங்குச் சினிமாப்படங்கள் உற்பத்திசெய்ய ஓர் தொழிற்சாலை இப்பொழுது ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் அநேக இடங்களில் தாமிரம், பித்தளை, வெண்கலம் இவற்றால் பாத்திரங்கள் செய்கிறார்கள். சென்னையை அடுத்த பேரம்பூரிலுள்ள ரயில்வேத் தொழிற்சாலையில் ஆயிரக் கணக்கானவர்கள் வேலை செய்து பிழைக்கின்றனர். இதைத் தவிர, பல்லாவரத்தையடுத்த குரோம் பேட்டையிலுள்ள குரோம் தோற்சாலையிலும், சைதாப்பேட்டையிலுள்ள சோப் செய்யுமிடத்திலும், திருவொற்றியூரில் வத்திப் பெட்டிகள் செய்யுமிடத்திலும் அநேகர் வேலை செய்கின்றனர். பொன்னேரி தாலுகாவிலுள்ள கவரைப்பேட்டை, கரனோடை, சோழவரம் முதலிய கிராமங்களில் நகைகள் செய்வதற்கான இமிடேஷன் சிவப்புக்கற்கள் தயார் செய்கிறார்கள்.



கைராட்டினம்

நமது ஜில்லாவில் விவசாயிகளில் பலர் விவசாய நாட்கள் போக மற்ற காலங்களில் வீண்பொழுது போக்குகின்றனர். ஆகையால் இவர்கள் மகாத்மா காந்தியவர்கள் சொல்வது போல் கைராட்டினத்தில் நூல் நூற்றல் முதலிய குடிசைத் தொழில்களைச் செய்தால், தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொண்டு சந்தோஷமாக வாழக்கூடும்.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் முக்கியமாகக் காணப்படும் மண் வகைகள் எவை? எங்கெங்கே காணப்படுகின்றன?

2. நமது ஜில்லாவில் முக்கிய ஏரிகள் எவை?

3. உங்கள் ஊரிலுள்ள நிலங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் பாய்கிறது?

4. உங்கள் ஊரில் நன்செய் நிலங்கள் அதிகமா? புன்செய் நிலங்கள் அதிகமா?

5. உங்கள் ஊரில் முக்கிய விளைபொருள்கள் எவை?

6. நமது ஜில்லாவில் வெற்றிலை, புஷ்பம் இவைகள் எங்குக் கிடைக்கின்றன?

7. பொன் விளைந்த களத்தூருக்கு ஏன் அப்பெயர் வந்தது?

8. கீழ்க்கண்ட வாக்கியங்கள் சரியா, தப்பா என்று கூறுக:—

i நெல் புன்செய் பயிர்.

ii நாகலாபுரம் மலைப்பிரதேசத்தில் காடுகள் அதிகம்.

iii அடையார் நதித் தண்ணீர் செம்பரம்பாக்கம் ஏரியில் விழுகிறது.

9. பட்டுச் சேலைகள், லுங்கிகள், மஸ்லின்கள் இவை நமது ஜில்லாவில் எவ்வெவ் விடங்களில் நெய்யப்படுகின்றன?

10. உங்கள் ஊரில் முக்கிய கைத்தொழில்கள் எவை?

பத்தொன்பதாம் பாடம்

தாலுகாக்களும், முக்கிய பட்டணங்களும், அங்குள்ள தொழில்களும்

நமது ஜில்லாவை ஏழு தாலுகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள் என்று சொன்னோமல்லவா? இப்பொழுது நாம் ஒவ்வொரு தாலுகாவிலுமுள்ள முக்கிய பட்டணங்களைப் பற்றிப் படிப்போம்.

I. பொன்னேரி தாலுகா

இத்தாலுகா நமது ஜில்லாவின் வடகோடியில் இருப்பதைப் பார். இங்குக் கடற்கரையோரமாக மணற்பாங்கான பூமியும், மற்ற இடங்களில் சாதாரணமாகச் செம்மண் பூமியும் இருக்கின்றன. இங்குக் கம்பு, நெல், பழங்கள், கரும்பு, எள், கேழ்வரகு, காய்கறிகள், வாழை இவைகள் பயிராகின்றன.

பொன்னேரி:—இது இந்தத் தாலுகாவின் முக்கிய பட்டணம். ஆரணிய நதிக் கரையில் இருக்கிறது. இங்கு ஒரு டிப்டி தாசில்தார் இருக்கிறார். இங்கு ஒரு விஷ்ணு கோயிலும், ஜில்லா போர்டார் நடத்தும் ஓர் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இங்குத் துணிகளுக்குச் சாயமேற்றும் வேலை விசேஷமாக நடக்கிறது.

சத்யவேடு.—இது இந்தத் தாலுகாவின் மேற்கே யுள்ளது. இங்கு ஒரு டிப்டி தாசில்தார் இருக்கிறார்.

பழவேற்காடு:—இது இப்பெயர் கொண்ட ஏரியின் தென் கோடியில் இருக்கிறது. சுமார் 300 வருஷங்களுக்கு முன் டச்சுக்காரர் என்ற ஐரோப்பியர்கள் இதைக் கைப்பற்றினார்கள். பிறகு இது சுமார் 150 வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் வசம் வந்தது. இவ்வூர் முற்காலத்தில் ஓர் பிரபலத் துறைமுகமா யிருந்தபடியால் இங்கு ஓர் தீபஸ்தம்பம் இருக்கிறது.

ஆரணி:—இது ஆரணிய நதிக் கரையில் இருக்கிறது. இங்கு நேர்த்

தியான மஸ்லின் துணிகள் நெய்யப் படுகின்றன.

கும்மிடிப்பூண்டி — இது பொன்னேரிக்கு வடமேற்கிலுள்ள ஓர் வியாபார ஸ்தலம். இங்கிருந்து மீன், மிளகாய் முதலியதைகள் சென்னைக்கு அனுப்பப் படுகின்றன.

II. திருவள்ளூர் தாலூகா

இது நமது ஜில்லாவின் வடமேற்கிலுள்ளது. இந்தத் தாலூகா சிவப்பு மண் கலந்த பூமியாகவே இருக்கின்றது. இங்கே கொள், நெல், வெற்றிலை, நிலக்கடலை, கம்பு, சோளம், எள், கேழ்வரகு முதலியவைகள் பயிராகின்றன.

திருவள்ளூர்:—இது இந்தத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இங்குள்ள வீரராகவப்பெருமாள் கோயில் மிக விசேஷமானது. ஒவ்வொரு அமாவாசையன்றும் தரிசனத்துக்காக அநேகர் வருகின்றனர். இங்கு டிப்டி கலெக்டர் ஆபீசும், பாதிரிமார்கள் நடத்தும் ஓர் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ்வூர் ஒரு யூனியன்.

இவ்வூருக் கருகிலுள்ள தோழூர் வெற்றிலைக்குப் பெயர் போனது. ஈக்காடு என்னும் மற்றொரு ஊரில் பாதிரிமார்கள் நடத்தும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது.

பெரிய பாளையம் :—இது ஆரண்ய நதியின் தென்கரையி லுள்ளது. இவ்வாற்றின் வடகரையில் இவ்வூருக்குச் சமீபத்தில் ஓர் பிடாரி அம்மன் கோயில் இருக்கின்றது. ஆடி மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு நடக்கும் உற்சவம் மிகப் பிரபலமானது.

நாகலாபுரம் :— இது இத்தாலூகாவின் வடமேற்கு மூலையிலுள்ளது. இங்கு விஜய நகரத்து அரசர்களால் கட்டப்பட்ட விஷ்ணுகோயில் ஒன்று இருக்கிறது.

III. ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா

இது திருவள்ளூர் தாலூகாவுக்குத் தெற்கேயுள்ளது. இங்கு மணல் கலந்த செம்மண் பூமியே அதிகம். ஆகையால் புன்செய்ப் பயிர்களாகிய கொள், சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய பயிரிடப்படுகின்றன. ஏரியையொட்டிய இடங்களில் நெல், கரும்பு இவைகளும் கொஞ்சம் பயிராகின்றன.

ஸ்ரீபெரும்பூதூர் :— இது திருவள்ளூருக்குத் தெற்கே 8 மைல் தூரத்திலுள்ளது. இதுவே இந்தத் தாலூகாவின் தலை நகர். இது ஒரு யூனியன். இங்குப் பிரபல வைஷ்ணவ சமய ஆசாரியரான இராமானுஜாச்சாரியாருக்கு ஒருகோயில் இருக்கிறது இங்குத் தாசில்தார் ஆபீசும், ஜில்லா போர்டு மிடில் ஸ்கூலும், சம்ஸ்கிருத பாடசாலையும் இருக்கின்றன.

பூவிருந்தவல்லி :— இது ஸ்ரீபெரும்பூதூருக்கு வடகிழக்கே சுமார் 10 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஒரு யூனியன். இங்கு ஓர் பழைய கோட்டை இருக்கிறது. இவ்வூர் மிக ஆரோக்கியமானதால் இங்கு அநேக ஐரோப்பியர்களும் இருக்கின்றனர். இங்கு மாஜிஸிட்ரேட் கோர்ட்டும், ஜில்லா போர்டு ஹைஸ்கூலும், குருடர் செவிடர்களுக்காக ஓர் ஸ்கூலும் இருக்கின்றன. இங்குப் புஷ்பங்களும், வெற்றிலையும் விசேஷமாகக் கிடைக்கின்றன.

தின்னனூர் :—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு ஓர் சிவன் கோயிலும், ஓர் விஷ்ணு கோயிலும் இருக்கின்றன.

IV. சைதாப்பேட்டை தாலூகா.

இந்தத் தாலூகா நமது ஜில்லாவில் கிழக்குப்பாகத்தில் சென்னையைச் சுற்றி வியாபித்திருக்கின்றது. இந்தத் தாலூகாவே நமது ஜில்லாவில் அதிக ஜன நெருக்கமுள்ள பிரதேசம். கடற்கரை யோரத்தில் மணற்பாங்கான பூமியும், மற்ற இடங்களில் செம்மண் பூமியுமாக இருக்கின்றது. ஆறு, ஏரிகள் இவைகள் ஓரமாகக் கரிசல் மண் பூமியும் இருக்கின்றது. நெல், வெற்றிலை, கம்பு, சோளம், கேழ்வரகு இவை முக்கிய விளை பொருள்கள்.

சைதாப்பேட்டை :—இது அடையாற்றின் வடகரையில் சென்னைக்கு 5 மைல் தூரத்தில் தென்மேற்கே யுள்ளது. இது இந்தத் தாலூகாவுக்குத் தலைநகரா யிருப்பதோடு, இந்த ஜில்லாவிலும் ஓர் முக்கிய பட்டணம். ஏனெனில் இங்கு ஜில்லாக் கலெக்டர் வசிக்கிறார். இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்கு உபாத்தியாயர்களுக்காக ஓர் போதனுமுறைக் கல்லூரியும் (Teachers' College) கால் நடை வைத்தியசாலையும், சர்க்கார் ஹைஸ்கூலும், ஜில்லாக் கலெக்டர் ஆபீஸ், ஜில்லாக் கல்வி யதிகாரி ஆபீஸ், ஜில்லா போர்டு ஆபீஸ் முதலியவைகளும், தேகப் பயிற்சி உபாத்தியாயர்களுக்காக ஒரு கல்லூரியும் (Y.M.C.A. College of Physical Education) இருக்கின்றன. இக் கல்லூரிக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் கூடப் பலர் பயில வருகின்றனர். லுங்கி வஸ்திரங்கள் நெய்தலும், துணிகளுக்குச் சாயம் போடுதலும் இவ்வூரில் முக்கியமான தொழில்கள்.

கிண்டி :—இது சைதாப் பேட்டைக்குத் தெற்கே ஒருமைல் தூரத்திலுள்ளது. இங்குச் சென்னை கவர்னருக்காகத் தோட்டங்கள் சூழப்பட்ட மாளிகை யொன்றும், குதிரைப் பந்தய மைதானமும், ஒக்ஸ் கம்பெனி யாரின் சுருட்டுகள் செய்யும் தொழிற்சாலையும், சிற்பக் கலாசாலையும் (Engineering College) இருக்கின்றன. தவிர, அம்மைப்பால் எடுக்கவும், சில தொத்து வியாதிகள் வருவதைத் தடுக்க மருந்துகள் செய்யவும், மனிதர்களின் ரத்தத்தைப் பரிசோதித்து வியாதிகளைக் கண்டு பிடிக்கவும், அநேக இடங்களிலுள்ள தண்ணீரைப் பரிக்ஷை செய்யவும் கிங் இன்ஸ்டிடியூட் என்ற ஓர் வைத்தியசாலையும் இருக்கின்றது. இங்குச் சினிமாப் படங்கள் பிடிக்கத் தொழிற்சாலையும் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது.

பரங்கிமலை :— முற்காலத்தில் ஐரோப்பியர்களைப் பரங்கிக்காரர் என்று சொல்வது வழக்கம். இங்கு ஐரோப்பியர்கள் இருக்கின்றபடியால் இவ்வூருக்கு அப்பெயர் வந்தது. மேலும் இவ்வூருக்கு செயிண்ட் தாமஸ் மவுண்டு என்றும் பெயர். இது ஒரு யூனியன். இவ்வூர் அதிக ஆரோக்கியமா யிருப்பதால் இங்கு இராணுவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஜில்லா போலீஸ் அதிகாரி, மாகாண விவசாய இலாகா அதிகாரி இவர்கள் ஆபீசுகளும் இருக்கின்றன.

பல்லாவரம் :— இவ்வூருக்குக் கிழக்கில் ஒன்றன்பின் ஒன்றாக 500 அடி உயரமுள்ள இரண்டு குன்றுகள்

இருக்கின்றன. இவை கடலிலிருந்து வரும் குளிர்ந்த காற்றைத் தடுத்து விடுவதால் இங்கு வரட்சியான காற்று வீசுகின்றது. ஆகையால் இவ்வூர் மிக ஆரோக்கியமானது. இங்குப்பல ஐரோப்பியர்கள் வசிக்கின்றனர்.

தாம்பரம் :— இது பல்லாவரத்துக்குத் தெற்கே சுமார் 4 மைல் தூரத்திலுள்ளது. சென்னையிலிருந்து புறப்படும் மின்சார ரயில் வண்டிகள் இங்கு முடிவடைகின்றன. எனவே இவ்வூர் இப்பொழுது முக்கியமாயிருக்கின்றது. சென்னையிலிருந்த கிறிஸ்தவர்கள் நடத்தும் கல்லூரியை (Christian College) இப்பொழுது அதிகச் செலவில் இங்கு மாற்றியிருக்கின்றனர்.

அடையாறு :— இது அடையாறு கடலில் கலக்கும் இடத்திலுள்ளது. இங்குப்பிரமஞான சபையாரின்(Theosophical Society) தலைமை ஆபீசும், அவர்களால் நடத்தப்படும் சிறந்த புத்தகசாலையும், ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ்வூர் மிக ஆரோக்கியமானது.

செம்பியம் அல்லது சிறுவள்ளூர் :- இது பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷனை யடுத்துள்ளது. இது இம்மாகாணத்திலேயே பெரிய யூனியன். இங்கு மிகப் பெரிய ரயில்வே தொழிற்சாலை யொன்று இருக்கிறது இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கின்றனர். இங்கு ஹைஸ்கூல் ஒன்று இருக்கின்றது.

திருவொற்றியூர் :— இது சென்னைக்கு வடக்கே சுமார் 5 மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள சிவன் கோயிலில் தரிசனத்துக்காக அநேகர் வெள்ளிக் கிழமைதோறும் வருகின்றனர். இங்கு நடைபெறும் மகிழடி சேர்வை என்ற உற்சவம் மிகப் பெயர் பெற்றது. பட்டினத்தார் என்ற மஹான் சமாதியடைந்த இடம் இதுவே. இங்கு வத்திப் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது.



எண்ணூர் லேக் ரயில்வே பிரிட்ஜ்

எண்ணூர் :— இது சென்னைக்கு வடக்கே சுமார் 8 மைல் தூரத்திலுள்ளது. இங்கு உப்புச் செய்வதும், மீன் பிடிப்பதும் முக்கியமான தொழில்கள். இது மிக ஆரோக்கியமான இடம். இங்கு அநேக ஐரோப்பியர்கள் வசிக்கின்றனர்.

V. செங்கற்பட்டு தாலுகா.

இது சைதாப் பேட்டைக்குத் தெற்கேயுள்ள கடற்கரைத் தாலுகா. இத் தாலுகா வழியே பாலாறு சென்று கடலில் கலக்கின்றது. பக்கிங்ஹாம் கால்வாய் இந்தத் தாலுகாவில் கடற்கரையை யொட்டிச் செல்கிறது. இத் தாலுகா முழுவதும், கடற்கரையை யொட்டிய பிரதேசத்தைத் தவிர, கரிசல் மண் நிறைந்த பூமியானதால் மிகச் செழிப்பாக இருக்கிறது. இங்கு நெல், காய்கறிகள், பழங்கள், கேழ்வரகு இவை விசேஷமாகப் பயிராகின்றன. இத்தாலுகாவில் போக்குவரவு மார்க்கங்கள் விசேஷமாக இருக்கின்றன.

செங்கற்பட்டு நகரம்

பிள்ளைகளே! நமது ஜில்லாவில் முக்கிய நகரம் செங்கற்பட்டு. இவ்வூரைப் பற்றியே இந்த ஜில்லாவுக்கு இப்பெயர் வந்தது. ஆனால் ஜில்லாவின் முக்கிய அதிகாரியாகிய கலெக்டர் சென்னையை யடுத்த சைதாப்பேட்டையில் வசிக்கிறார். செங்கற்பட்டில் சப்கலெக்டர் இருக்கின்றார்.

செங்கற்பட்டு பாலாற்றுக்கு வடகரையில் சுமார் அரை மைல் தூரத்தில் இருக்கின்றது. இது ஒரு முனிசிபாலிடி. இவ்வூரின் தென் மேற்கு மூலையில் பல குன்றுகள் இருக்கின்றன. நாம் இப்பொழுது இவ்வூரைச் சுற்றிப் பார்ப்போம்.

இவ்வூரை யடுத்த இரயில்வே ஸ்டேஷனிலிருந்து புறப்படுவோம். ஸ்டேஷன் எவ்வளவு அழகாகவும், பெரிதாகவும் இருக்கிறது பார். இவ்வூரிலிருந்து மூன்று இடங்களுக்கு இரயில் பாதைகள் செல்கின்றன.



இரெயில்வே ஸ்டேஷன்

படத்தைப் பார்த்து இவைகள் எங்கெங்குச் செல்கின்றன என்று சொல்லுங்கள். ஸ்டேஷனை யொட்டிக் கிழக்கே ஓர் ஏரி இருக்கின்றது பாருங்கள். இது சுமார் 2 மைல் நீளமும், 1 மைல் அகலமும் இருக்கிறது. இதற்குக் கொளவாய் ஏரி என்று பெயர்.

ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தால் தெற்குநோக்கி ஓர் சாலை செல்லுகிறது. இது இரண்டாகப் பிரிந்து, மேலமெய்யூர் என்ற இடத்தின் வழியாகத் திருக்கழுக்குன்றம் என்ற க்ஷேத்திரத்துக்குச் செல்லுகிறது. மற்றொரு பிரிவு மதுராந்தகத்திற்குச் செல்லுகிறது. மேலமெய்யூரில் அநேக உத்தியோகஸ்தர்களின் பங்களாக்களைக் காண்கிறோம்.

ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ஆஸ்பத்திரியும், பிரயாணிகள் தங்குதற்கான ஓர் சத்திரமும் இருக்கின்றன பார். சத்திரத்துக்குச் சமீபத்தில் போலீஸ் ஸ்டேஷனும், மோட்டார் பஸ்கள் நிற்குமிடமும் இருக்கின்றன. இங்கிருந்து தெற்கே சென்றால் ஹைஸ்கூலைத் தாண்டி, கடைவீதி வழியே மார்க்கட்டுக்கு வந்து சேருவோம். கடைகளில் எவ்வளவு விதவிதமான சாமான்கள் வைத்திருக்கிறார்கள் பார். இப்பாதை பிறகு மதுராந்தகம் சாலையுடன் கலக்கின்றது.

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருந்து மேற்காக ஓர் சாலை செல்கிறது பார். இது காஞ்சீபுரத்துக்குப் போகும் சாலை. இதன் சமீபத்தில் முனிசிபல் ஆபீஸ், சப்ஜட்ஜ் கோர்ட்டு, தபாலாபீஸ், மாதாகோயில், சப்ஜெயில், போலீஸ் விடுதிகள் முதலியவை இருக்கின்றன. இங்கிருந்து மற்றொரு பாதை தென் மேற்காகப் பிரிந்து பாலாற்றுக்குச் செல்கிறது.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வடக்காக ஓர் பாதை செல்கிறது பார். இது இரயில் பாதையை யொட்டிச் செல்கிறது. இவ்வழியே சென்றால்,



செங்கற்பட்டு நகரம்

1. ரயில்வே ஸ்டேஷன்.
2. ஆஸ்பத்திரி.
3. பஸ் ஸ்டாண்டு.
4. சத்திரம்.
5. போலீஸ் ஸ்டேஷன்.
6. மார்க்கெட்டு.
7. முனிசிபல் ஆபீஸ்.
8. சப்ஜட்ஜ் கோர்ட்டு.
9. சப்ரிஜிஸ்ட்ராராபீஸ்.
10. தபால் ஆபீஸ்.
11. மாதா கோவில்.
12. ஸ்கூல்கள்.
13. சப் ஜெயில்.
14. போலீஸ் விடுதிகள்.
15. ரிபர்மேட்டரிஸ்கூல்.
16. தேர் மஹால்.
17. தாலூகா ஆபீஸ்.
18. ஜில்லாஜட்ஜ் கோர்ட்டு.
19. சப்மாஜிஸ்ட்ரேட் ஆபி
20. மராமத்து இலாகா. [ஸ்



பழைய கோட்டையும், கொளவாய் ஏரியும்

இரயில்பாதைக்குக் கிழக்கே ஓர் பழைய கோட்டை இருக்கிறது பார். இது சுமார் 300 வருஷங் களுக்கு முன் சந்திரகிரி அரசர் களால் கட்டப்பட்டதாகச் சொல் லுகிறார்கள். பிறகு இது முகம் மதிய அரசர்கள் கைவசப்பட் டுக் கடைசியாக ஆங்கிலேயருக் குச் சொந்தமாயிற்று. இக்கோட் டைக்குள், சிறுவயதுள்ள கைதி களைச் சீர்திருத்தி அவர்களுக்குத் தொழிற் கல்வியும் போதிக்க ஓர் பாடசாலை (Reformatory School) இருக்கிறது. இங்கு மாணவர்கள் கைக் குட்டைகள், கம்பளம், இரும் புச் சாமான்கள், பிரம்புச் சாமான் கள், பாய்கள் முதலியன செய்கிறார் கள். இந்தக் கோட்டைக்குள்ளேயே ஜில்லா ஜட்ஜ் கச்சேரியும், ஐரோப்பி யக் கைதிகளைக் காவலில் வைக்கத் தேர்மஹால் என்ற கட்டடமும், தாலுகா ஆபீசும், சப்மாஜிஸ்டி ரேட் ஆபீசும், மராமத்து இலாகா ஆபீசும் இருக்கின்றன.

செங்கல்பட்டுக்குத் தெற்கே சுமார் 3 மைல் தூரத்தில் திருமணி என்னு



ரெபர்மேடரி ஸ்கூல் செங்கற்பட்டு

மிடத்தில் ஓர் பெரிய ஆஸ் பத்திரி இருக்கின்றது. இதற்குத் தெற்கே 2 மைல் தூரத்தில் பொன் விளைந்த களத்தூர் இருக்கிறது. இங்கு ஒரு காலத்தில் பொன் விளைந்ததாகச் சொல் கிறார்கள். ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய தமிழ்க் கவிகள் பிறந்த இடம் இதுவே.



தேர் மஹால்

திருக்கழுக்குன்றம்:—இது செங்கற்பட்டுக்குக் கிழக்கே 9 மைல் தூரத்திலுள்ளது.

இங்குள்ள குன்று, நான்கு வேதத்தைப்போல் நான்காகப் பிரிந்திருப்பதால் இதற்கு வேத கிரி மலை என்னும் பெயர். இதன் ஒரு பாகத்தில் சிறந்த மூலிகைகள் கிடைப்பதால் அதற்குச் சஞ்சீவி மலை என்றும் பெயர். மலைமீது ஓர் சிறந்த சிவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. இங்குத் தினந்தோறும் பகல் 12 மணிக்கு இரண்டு கழுகுகள் வந்து, பண்டாரம் கொடுக்கும் பிரசாதத்தைச் சாப்பிட்டுச் செல்கின்றன. இதனால் இவ்வூருக்குத் திருக்கழுக் குன்றம் என்ற பெயர் வந்தது. இவைகளைத் தரிசிக்க அநேகர் வருகின்றனர். மலையடிவாரத்தில் ஓர் திருக்குளம் இருக்கிறது. இதில் 12 வருஷத்துக்கு ஒரு முறை ஓர் சங்கு உற்பத்தியாகிறது. எனவே இதற்குச் சங்கு தீர்த்தம் என்று பெயர். இத்தண்ணீரில் இரும்புச் சம்பந்தம் இருப்பதால் உடம்புக்கு மிக ஆரோக்கியமானது. ஆகவே இங்கு அநேக வியாதியஸ்தர்களும் தங்குகிறார்கள்.

மஹாபலிபுரம் அல்லது மஹா மல்லவ புரம் :—இங்கு ஒரு காலத்தில் பல்லவ அரசரான நரசிம்ம வர்மன் மஹாமல்லவர் என்பவர் 7 கோயில்களைக் கட்டினார். எனவே இவ்வூருக்கு இப்பெயர் வந்தது. அவற்றில் ஆறு கடலில் மூழ்கிப் போக, ஒன்று மட்டும் அலைகளால் மோதப்பட்டு நிற்கின்றது. இங்கு ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஓர் ரதமும் இருக்கின்றது. இங்குள்ள கற்களில் அர்ச்சுனன் தவம் செய்த மகிமையும் செதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இவ்வூர் பல்லவராஜ்யத்துக்குமுக்கியமான துறைமுகப் பட்டினமாயிருந்தது. இங்குக் கடலில் ஸ்நானம் செய்வது மிக விசேஷமாகக் கருதப்படுகிறது. எனவே இதற்கு "அர்த்த சேது" (பாதி இராமேஸ்வரம்) என்றும் பெயர்.

திருப்போரூர் :—இது செங்கற்பட்டிற்கு வடகிழக்கேயுள்ளது. இது ஒரு சிறந்த சுப்ரமணிய ஸ்தலம். இங்குக் கிருத்திகைதோறும், சென்னையிலிருந்து அநேகர் பக்கிங்ஹாம் கால்வாய் வழியே படகுகளில் வருகின்றனர்.



கோவளம்

கோவளம் :—இது சென்னைக்குத் தெற்கே சுமார் 20 மைல் தூரத்திலுள்ளது. இது முற்காலத்தில் டச்சுக் காரர்களுக்குச் சொந்தமானது. இங்கு உப்பளங்கள் இருக்கின்றன.

சதுரங்கப் பட்டணம :—இவ்வூர் பாலாறு கடலில் விழு மிடத்திற்குச் சமீபத்திலுள்ளது. முற் காலத்தில் இது டச்சுக்காரருக்குச் சொந்தமானது.

VI. காஞ்சிபுரம் தாலூகா

இத்தாலூகா நமது ஜில்லாவின் தென் மேற்குப் பாகத்தில் உள்ளது. இங்குள்ள குன்றுகள், ஆறுகள் எவை என்பதைப் படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள். இத்தாலூகா முழுவதும் கரிசல் மண் கலந்த பூமியாயும் நீர் வசதியுள்ளதாயு மிருப்ப

தால் மிகவும் செழிப்பா யிருக்கிறது. நெல், காய் கறிகள், நிலக்கடலை, கேழ்வரகு இவைகள் பயிராகின்றன. இங்கிருந்து நெல் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகிறது. நெசவு வேலையே இங்கு முக்கிய கைத்தொழில். இந்தத் தாலுகாவில் போக்கு வரவு மார்க்கங்கள் விசேஷமாக இருக்கின்றன.

காஞ்சிபுரம் :—இது இந்தத் தாலுகாவின் தலைநகர். தவிர இது இந்த ஜில்லாவிலேயே பெரிய பட்டணம்.



காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில்

இது ஒரு முனிசிபாலிடி. நமது தேசத்திலுள்ள ஏழு புண்ணிய க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று. இங்கு 108 சிவாலயங்களும், 18 விஷ்ணு ஆலயங்களும் இருக்கின்றன. இவற்றுள் வரதராஜப் பெருமாள் கோயிலும், ஏகாம்பரநாதர் கோயிலும், காமாட்சி அம்பாள் கோயிலுமே முக்கியமானது. இங்கு எந்நாளும் நமது தேசத்தின் பல பாகங்களிலிருந்து யாத்ரிகர்கள்வந்து கொண்டே யிருப்பார்கள். வைகாசி மாதத்தில் நடக்கும் வரதராஜர் கருடசேவைக்கும், பங்குனி மாதம் நடக்கும் ஏகாம்பரநாதர் உற்சவத்திற்கும் ஏராளமான கூட்டம் கூடும். இங்கு அநேக சத்திரங்களும், வேத பாட சாலைகளும் உண்டு. இவ்வூர் வெவ்வேறு காலங்களில் புத்தர், ஜெயினர், சைவமத ஆச்சாரியர்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள் இவர்களுக்கு முக்கிய ஸ்தானமா யிருந்தது. வெகு காலத்துக்கு முன் இவ்வூர் முதலில் பல்லவ அரசர்களுக்கும் பிறகு சோழ அரசர்களுக்கும் தலைநகரா யிருந்தது.

இவ்வூருக் கருகிலுள்ள வேகவதி யாற்றில் ஊற்றுக் கிணறுகள் வெட்டி அவைகளிலிருந்து இவ்வூருக்குச் சுத்தமான தண்ணீர் குழாய்கள் மூலமாய்க் கொண்டுவரப்படுகிறது. இவ்வூரில் வள்ளல் பச்சையப்ப முதலியாரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஹைஸ்கூலும், மிடில் ஸ்கூலும், கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் ஓர் ஹைஸ்கூலும், பொது ஜனங்களால் நடத்தப்படும் மற்றொரு மிடில் ஸ்கூலும், முனிசிபாலிடியாரால் நடத்தப்படும் அநேக ஆரம்பப் பாடசாலைகளும், சர்க்காரால் நடத்தப்படும் பெண் பிள்ளை உபாத்தியாயினிகள் போதனு முறைப் பாடசாலையும் இருக்கின்றன. நெசவுத் தொழில் அதிகம். எனவே இவ்வூர் பட்டுச் சேலைகளுக்கும், நூல் வஸ்திரங்களுக்கும் பெயர் பெற்றது. இவ்வூருக் கருகிலுள்ள திருப்பருத்திக் குன்றம் என்னுமிடத்தில் அழகான ஜெயினக் கோயில்கள் இருக்கின்றன.

உத்தரமேரூர்:—இது இந்தத்தாலுகாவின் மேற்குப் பாகத்தில் உள்ளது. இவ்வூருக் கருகில் ஓர் பெரிய ஏரி இருக்கின்றது. இங்கு ஓர் விஷ்ணு கோயிலும், டிப்டி தாசில்தார் ஆபீசும், போர்டு மிடில் ஸ்கூலும் இருக்கின்றன. இங்கு நெசவுத் தொழில் விசேஷமானது.

வாலாஜாபாத் :— முற்காலத்தில் ஆற்காட்டை யாண்ட வாலாஜா என்ற நவாப் இவ்வூரை ஏற்படுத்திய தால் இதற்கு இப்பெயர் வந்தது. இங்கு முற்காலத்தில் சைனியங்கள் வைத்திருந்ததால் இதற்குத் தண்டு சீவரம் என்றும் பெயர். இது பாலாற்றின் கரையிலுள்ளது. இங்கு வேற்கடலை, நெல் முதலியன பயிராகின்றன. சில தோல் பதனிடும் சாலைகளும் இருக்கின்றன. இங்குக் கூடும் சந்தை விசேஷமானது. இங்கு ஏற்பட்டிருக்கும் இந்துமதப் பாடசாலையில் மாணவர்களுக்குக் கல்வியேயன்றி நெசவு வேலை, தச்சுவேலை, பொத்தான்கள் செய்வது முதலிய கைத்தொழில்களும் போதிக்கப்படுகின்றன.

VII. மதுராந்தகம் தாலூகா.

இது நமது ஜில்லாவின் தெற்குக் கோடியிலுள்ளது. மதுராந்தகத்துக்குச் சமீபத்தில் சுமார் 7 மைல் சுற்றளவுள்ள ஓர் பெரிய ஏரி இருக்கிறது. இதற்குக் கிளியாறு என்ற ஓர் சிற்றாற்றின் தண்ணீர் பாய்கிறது. பிறகு கல்லாறு என்ற ஒரு சிறு நதி இங்கிருந்து உற்பத்தியாகிறது. கடற்கரையை யொட்டிய பாகங்களைத்தவிர மற்ற இடங்களில் கரிசல் மண் அதிகம். நெல், வெற்றிலை, நிலக்கடலை, கம்பு. சோளம், எள், கேழ்வரகு, கொள் இவை பயிராகின்றன.

மதுராந்தகம் :—இது இந்தத்தாலூகாவின் தலைநகர். இது ஒரு யூனியன். இங்கு ஓர் விஷ்ணு கோயிலும், ஜமீன்தார் நடத்தும் ஹைஸ்கூலும், மாஜிஸ்டிரேட் ஆபீசும் இருக்கின்றன.

இடக்காடு :—இது கடற்கரையை யொட்டியதோர் சிற்றூர். இங்குத் தென்னை விசேஷம்.

செய்யூர், சூணம்பேடு :—இவை இரண்டும் கடற்கரையை யடுத்த இரு ஜமீன்கள். இங்கு உப்பளங்கள் இருக்கின்றன.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் கடற்கரையையுடைய தாலூகாக்கள் எவை?
2. பொன்னேரி தாலூகாவின் நிலவளம், நீர்வளம் எப்படிப்பட்டது?
3. திருவள்ளூர் தாலூகாவின் எல்லைகள் என்ன? இங்குப் பாயும் நதிகள் எவை?
4. பூவிருந்த வல்லியைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.
5. சைதாப்பேட்டை எவ்விதங்களில் முக்கியமானது?
6. பல்லாவரம் ஏன் மிகவும் ஆரோக்கியமான இடமாயிருக்கின்றது?
7. தாம்பரம், அடையாறு, செம்பியம், திருவொற்றியூர், திருமணி, இவைகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
8. திருக்கழுக்குன்றத்துக்கு யாத்ரிகர்களும் வியாதியஸ்தர்களும் வருகிறார்கள். ஏன்?
9. மஹாபலிபுரத்திலுள்ள விசேஷங்கள் யாவை?
10. மதுராந்தகம் ஏன் மிகச் செழிப்பாக இருக்கிறது?
11. செங்கற்பட்டு பாலாற்றுக்கு எப்புறத்தில் இருக்கிறது?
12. செங்கற்பட்டுக் கோட்டை எப்பொழுது கட்டப்பட்டது? அதற் குள்ளிருக்கும் முக்கிய ஆபீசுகள் எவை?

இருபதாம் பாடம்

போக்கு வரவு சாதனங்கள்

சிறுவர்களே! ஒரு ஜில்லாவின் முக்கியத் தோற்றங்களை ஒருவன்காண விரும்பினுல் அவன் அந்த ஜில்லாவைச் சுற்றிப் பார்ப்பது அவசியம். அப்படிச் சுற்றிப்பார்க்க அநேக வசதிகள் இருக்கின்றன. அவையாவன :—(1) கடல் மார்க்கம் (2) சாலை மார்க்கம் (3) ரயில் மார்க்கம் (4) ஆகாய மார்க்கம். நமது ஜில்லாவில் இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றன. வங்காளக் குடாக்கடலை யொட்டிச் சுமார் 260 மைல் நீளமுள்ள கால்வாயொன்று இருக்கின்றது. இதற்குப் பக்கிங்ஹாம் கால்வாய் என்று பெயர். சுமார் 60 வருஷங்களுக்கு முன் நமது மாகாணத்தில் ஓர் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது சென்னை கவர்னராயிருந்த பக்கிங்ஹாம் பிரபு ஏழைகளுக்கு உதவி புரிய இக்கால்வாயை வெட்டுவித்தார். ஆகவே இதற்கு இப்பெயர் வந்தது. இது வடக்கே கிருஷ்ணு ஜில்லாவிலிருந்து, தெற்கே தென் ஆற்காடு ஜில்லாவரை கரையோரமாகவே செல்கிறது.

நமது ஜில்லாவில் சுமார் 800 மைல் நீளம் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இவற்றில் 700 மைல் நீளம் வரை கப்பி போட்ட நல்ல ரஸ்தாக்கள். இதைத் தவிர 108 மைல் நீளம் இருப்புப் பாதையும் நமது ஜில்லாவில் இருக்கிறது.

(1) கடற்கரைப் பிரயாணம்

பிள்ளைகளே! நாம் இப்பொழுது நமது ஜில்லாவின் வடபாகத்திலுள்ள பழவேற்காடு என்னுமிடத்தில் ஒரு படகில் ஏறிக்கொண்டு கடலையொட்டிச் செல்லும் பக்கிங்ஹாம்



படகு

கால்வாய் வழியே தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்வோம். இங்குப் பழவேற்காடு என்ற ஓர் பெரிய ஏரி 37 மைல் நீளமும், 3 முதல் 11 மைல் அகலமும் இருக்கிறது. இதில் 6 மைல் நீளமே நமது ஜில்லாவில் இருக்கிறது.



விளக்குக்கூண்டு

பழவேற்காடு என்னும் ஊர் முன் காலத்தில் ஒரு முக்கிய துறைமுகமாக


செங்கற்பட்டு ஜில்லா
போக்கு வரவு
மார்க்கங்கள்
ஸ்கேல் 1 அங்—12 மைல்கள்
வ
மே
கி
தெ
சித்தூர் ஜில்லா
நெல்லூருக்கு
நெல்லூர்
ஜில்லா
நெல்லூருக்கு
சத்யவேடு
நாகலாபுரம்
பழவேற்காடு
பொன்னேரி
பெரியபாளையம்
எண்ணூர்
திருவொற்றியூர்
பெரம்பூர்
அரக்கோணத்திற்கு
திருவள்ளூர்
ஆவடி
சென்னை
சைதாப்பேட்டை
பூவிருந்தவல்லி
கிண்டி
பரங்கிமலை
ஸ்ரீபெரும்பூதூர்
பல்லாவரம்
அரக்கோணத்திற்கு
தாம்பரம்
வேலூருக்கு
காஞ்சீபுரம்
கோவளம்
வாலாஜாபாத்
திருப்போரூர்
வட ஆற்காடு
ஜில்லா
செங்கற்பட்டு
மஹாபலிபுரம்
உத்திரமேரூர்
திருக்கழுக்குன்றம்
பாலாறு
மதுராந்தகம்
சதுரங்கப்பட்டணம்
வங்காளக் குடாக்கடல்
செய்யூர்
இருப்புப்பாதை
பிராட்கேஜ்
மீட்டர்கேஜ்
ரஸ்தாக்கள்
தாலுகா எல்லைகள்
விழுப்புரத்திற்கு
சூணம்பேடு
தென் ஆற்காடு ஜில்லா

இருந்தது. அநேக வருஷங்களுக்கு முன் இங்குப் பல ஐரோப்பியர்கள் வசித்து வந்தனர்.

இங்கு ஓர் உயரமான விளக்குக் கூண்டு இருக்கிறது. இதன் உபயோகம் என்ன? இரவுக் காலங்களில் இங்கு வரும் கப்பல்களுக்கும், படகுகளுக்கும் இது வழிகாட்டியாக இருக்கிறது.

பழவேற்காட்டை விட்டு, மறுபடியும் தெற்கு நோக்கிச் செல்வோம். கிழக்கே கண்ணுக் கெட்டிய மட்டும் கடலைக் காண்கிறோம். மேற்கே எங்கும் மணல் மயமாகவே இருக்கிறது. அங்கங்கே பெரிய சவுக்குத் தோப்புகளையும் காண்கிறோம். எதிரே வரும் படகுகளில் கிளிஞ்சல், சவுக்கு விறகு, இவைகள் கொண்டுபோகப்படுவதைக் காண்கிறோம். தவிரவும், வடக்கேயுள்ள நெல்லூர் ஜில்லாவிலிருந்து அரிசி விசேஷமாகப் படகுகளில் கொண்டு வரப்படுகிறது.

பழவேற்காட்டுக்குத் தெற்கே சுமார் 7 மைல் தூரம் பிரயாணம் செய்தவுடன் எண்ணூரை அடைகிறோம். இங்குக் காற்று சுகமாகவும், எவ்வளவு ஆரோக்கியமாகவும் வீசுகின்றது பார். கடற்கரையை யொட்டி அநேக ஐரோப்பியர்களின் பங்களாக்களைக் காண்கிறோம். இங்கேயுள்ள உப்பு நீர் ஏரி எவ்வளவு அழகாக இருக்கின்றது பார். இங்குள்ள உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. வெண்மையாகப் படர்ந்திருக்கும் உப்பளங்களைப் பார். அநேகர் உப்புக் கட்டிகளை உடைத்துப் படகுகளில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள் பார். அநேக செம்படவர்கள் மீன்களைப் பிடித்து, அவைகளைப் படகுகளில் சென்னைக்கு அனுப்புவதைப் பார். மறுபடியும் சுமார் மூன்று மைல் தூரம் பிரயாணம் செய்து, திருவொற்றியூர் என்ற க்ஷேத்திரத்தை யடைகிறோம். இங்குள்ள சிவன் கோயில் எவ்வளவு அழகாயிருக்கிறது பார். பட்டினத்தார் என்ற பெரியாரின் சமாதியும் இங்கு இருக்கின்றது.

மறுபடியும் புறப்பட்டு, 5 மைல் பிரயாணம் செய்து சென்னைப் பட்டினத்தை யடைவோம். இது நமது மாகாணத்தின் தலைநகராகவும், மிகப் பெரிய பட்டினமாகவும் இருக்கிறது. இங்குள்ள அழகிய பெரிய கட்டடங்களையும் பார்த்துக்கொண்டே அடையாறு என்ற இடத்தில் அடைகிறோம். இங்கு அடையாறு நதி கடலில் சேருகிறது. இதற்குச் சமீபத்தில் பிரம்மஞான சபையாரின் தலைமை ஸ்தானக் கட்டிடங்கள் இருக்கின்றன. இச்சபையார் இங்கு ஒரு ஹைஸ்கூலையும் நடத்துகிறார்கள். இங்குள்ள ஓர் ஆலமரம் மிகப் பெயர் பெற்றது. இங்கு ஓர் சிறந்த புத்தகசாலையும் இருக்கிறது. கடற்கரையை யொட்டிச் சவுக்குத் தோப்புகள் விசேஷமாகக் காணப்படுகின்றன.

மறுபடியும் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்வோம். அங்கங்கே செம்படவர்கள் வசிக்கும் சிறு கிராமங்களைக் காண்கிறோம். மணல் வெளிகளும், சவுக்குத் தோப்புகளும் தவிர வேறு ஒன்றும் கண்ணுக்குத் தென்படுவதில்லை. சுமார் 20 மைல் தூரம் இம்மாதிரிப் பிரயாணம் செய்து கோவளம் என்னுமிடத்தை யடைகிறோம். இங்கும் உப்பளங்கள் விசேஷமாகக் காணப்படுகின்றன. இவ்வூர் வாசத்திற்கு மிக ஆரோக்கியமானது.

பிறகு சுமார் 4 மைல் தூரம் பிரயாணம் செய்து, திருப்போரூரை யடைகிறோம். இங்கு ஓர் குன்றும், அத

னடியில் சுப்ரமணிய சுவாமி கோயில் ஒன்றும் இருக்கின்றன. கிருத்திகை தோறும் இங்கு அநேக யாத்திரிகர்கள் வருகிறார்கள். இவர்களில் அநேகர் சென்னையிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியே படகிலேயே பிரயாணம் செய்கிறார்கள்.

பிறகு 6 மைல் தூரம் சென்றவுடன் மஹாபலிபுரத்தை யடைகிறோம். இவ்வூர் ஒரு காலத்தில் மிகவும் சிறப்புடையதா யிருந்தது. இங்கு முற்காலத்தில் பல்லவர்களின் அரசரான மஹாமல்லர் அல்லது நரசிம்ம வர்மன் என்பவரால் ஒரே கல்லால்



மஹாபலிபுரம் கல் இரதம்

செதுக்கப்பட்ட பெரிய ஓர் இரதத்தையும் காண்கிறோம். அர்ச்சுனன் தவம் செய்த மகிமையையும் கற்களில் செதுக்கப்பட்டிருக்கிறது பார். சில ஐரோப்பியர்களும், மற்றவர்களும் அங்கங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டும், காட்சிகளைப் புகைப்படங்கள் பிடித்துக்கொண்டும், இருக்கிறார்கள் பார்.

மறுபடி நமது பிரயாணத்தைத் தொடங்குவோம். சுமார் 5 மைல் தூரம் பிரயாணம் செய்தவுடன் சதுரங்கப்பட்டணத்தை யடைகிறோம். பிறகு கொஞ்ச தூரம் தெற்கே சென்றவுடன் பாலாறு கடலில் கலக்குமிடத்தை யடைகிறோம். இதற்குத் தெற்கில் இடக்காடு என்னுமோர் சிற்றூர் இருக்கின்றது. இங்குத் தென்னந் தோப்புகள் விசேஷமாகக் காணப்படுகின்றன. இங்கிருந்து தேங்காய், கீற்று முதலியவைகள் படகுகளில் சென்னை முதலிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கிருந்து மறுபடி பிரயாணம் செய்து, நமது ஜில்லாவின் தெற்கெல்லையை அடைகிறோம். இங்குப் படகைவிட்டிறங்கி ஓர்மோட்டாரில் ஏறிக்கொண்டு சூணம்பேடு என்னுமிடத்தை யடைகிறோம். இங்கிருந்து நமது ஜில்லாவைச் சாலை வழியே சுற்றி வருவோம்.

பயிற்சி

1. பக்கிங்ஹாம் கால்வாய் யாரால், எப்பொழுது, எதற்காக வெட்டப்பட்டது?
2. இக் கால்வாயினால் நமது ஜில்லாவுக்கு என்ன அனுகூலம்?
3. விளக்குக் கூண்டுகளால் என்ன உபயோகம்?
4. எண்ணூரில் முக்கிய கைத்தொழில்கள் எவை?
5. திருவொற்றியூர் எவ்விதங்களில் முக்கியமானது?
6. பக்கிங்ஹாம் கால்வாயின் இருபுறங்களிலுமுள்ள மண் எவ்வகையானது?
7. அடையாற்றில் என்ன காட்சிகளைக் காணலாம்?
8. மஹாபலிபுரம் கோயில்கள் யாரால் கட்டப்பட்டன? அவ்வூர் எவ்விதங்களில் சிறந்தது?

2. சாலை மார்க்கம்

நமது ஜில்லாவிலுள்ள முக்கிய சாலைகள் எல்லாவற்றிலும் மனிதர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் பஸ்களும், சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகளும் செல்கின்றன. சென்னையிலிருந்து வடக்கே ஒன்றும், தெற்கே ஒன்றும், தென்மேற்கே ஒன்றும் ஆக மூன்று முக்ய சாலைகள் செல்கின்றன. இவைகளைத் தவிர, அநேக சிறு பாதைகளும் செல்கின்றன.


மோட்டார் கார்


மோட்டார் லாரி

பக்கிங்ஹாம் கால்வாயை விட்டு மோட்டாரில் ஏறிச் சூணாம்பேட்டை அடைந்தோமல்லவா? சூணாம்பேடு ஒரு ஜமீன் கிராமம். இங்கே அநேக உப்பளங்களைக் காண்கிறோம். பிறகு வடமேற்காகப் பிரயாணம் செய்கிறோம். வழியில் கொஞ்ச தூரம் வரை மணற்பாங்கான பூமியையும், தென்னந் தோப்புகளையும் காண்கிறோம். பிறகு கிழக்காக ஒரு சாலை செய்யூர் என்னும் மற்றொரு ஜமீன் கிராமத்துக்குச் செல்கிறது. இங்கும் உப்பளங்கள் விசேஷமாக இருக்கின்றன.

பிறகு மதுராந்தகத்தை யடைகிறோம். இங்கு ஏழுமைல் நீளமுள்ள ஓர் பெரிய ஏரி இருக்கின்றது. சாலைக்கு இருபுறத்திலும் கரிசல் மண் பூமி காணப்படுகிறது. எனவே எங்கும் நெல், வெற்றிலை முதலிய பயிர்கள் நிறைந்து பச்சைப் பசேலென்றிருக்கின்றன. மேடான இடங்களில் எள், நிலக்கடலை, கேழ்வரகு முதலிய பயிர்களைக் காண்கிறோம். மதுராந்தகத்துக்கு வடக்காக ஓர் சாலை பிரிந்து மேற்கே சென்று, உத்தரமேரூர் என்ற ஊரை யடைகிறது. இங்கும் ஓர் ஏரியின் உதவியால் சாகுபடி விசேஷமாக நடக்கின்றது. நெல், கேழ்வரகு, எள் முதலியவை பயிராகின்றன. மதுராந்தகத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் சாலை தென் ஆற்காடு ஜில்லாவுக்குச் செல்கிறது.

மதுராந்தகத்தை விட்டுப் புறப்பட்டு, பாலாற்றைக் கடந்து, செங்கற்பட்டை யடைகிறோம். இங்கு கோள


கழுகுகள்

வாய் என்ற ஓர் பெரிய ஏரி இருக்கிறது. எங்கும் கரிசல் மண் பூமியே காணப்படுகின்றன. நெல், பலவித மான பழங்கள், காய்கறிகள், இவைகள் இங்கு விளைகின்றன. இங்கிருந்து தென் கிழக்காக ஒரு சாலை திருக்



திருக்கழுக்குன்றம்

கழுக்குன்றம் என்ற ஸ்தலத்துக்குச் செல்கிறது. இங்கு அழகியதொரு குன்றும், அதன் மீது ஒரு சிவாலயமும் இருக்கின்றன பார். திருக்கழுக்குன்றத்தி லிருந்து தென் கிழக்காக சதுரங்கப்பட்டணத்துக்கும், வட கிழக்காக மஹாபலிபுரத்துக்கும் ரஸ்தாக்கள் செல்கின்றன. வழியில் மணற்பாங்கான பூமியையும், சவுக்குத் தோப்புகளையும், முட்செடிகளையுமே காண்கின்றோம்.

செங்கற்பட்டிலிருந்து வட மேற்காக, பாலாற்றை யொட்டியே மற்றொரு பாதை செல்கிறதுபார். இதன் வழியே சென்றால் பழைய சீவரம் என்னுமிடத்தை யடைகிறோம். இங்கு ஆற்றோரமாயுள்ள குன்றின் மீது ஒரு கோயில் உளது. மறுபடி நாம் பிரயாணம்செய்து,வாலாஜாபாத் வழியே காஞ்சிபுரத்தை யடைகிறோம்.

காஞ்சிபுரம் நமது தேசத்திலேயே ஓர் முக்கிய க்ஷேத்திரம். எனவே இங்கு நமது தேசத்தில் எல்லாப் பாகங்களிலிருந்தும் யாத்ரிகர்கள் வருகிறார்கள். வைகாசி மாதத்தில் நடக்கும் வரதராஜப் பெருமாள் கருட உற்சவம் மிகவிசேஷமானது. இங்குள்ள வீதிகள் எவ்வளவு விசாலமாகவும், ஒழுங்காகவும், சுத்தமாகவும் இருக்கின்றன பார். காஞ்சிபுரம் ஜவுளிகளுக்குப் பெயர் பெற்றதால், இங்கு நூற்றுக்கணக்கான ஜவுளிக்கடைகளும் இருக்கின்றன பார். இங்கு வியாபாரம் எவ்வளவு சுறுசுறுப்பாக நடக்கிறது! ஊரைச்சுற்றி கரிசல் மண் நிறைந்த பூமியும், நெல் பயிரும் விசேஷமாகக் காணப்படுகின்றன. காஞ்சிபுரத்தி லிருந்து தெற்கிலும், மேற்கிலும் வடஆற்காடு ஜில்லாவுக்குச் சாலைகள் செல்கின்றன பார். மேற்கே செல்லும் சாலை தாமல் என்னும் கிராமத்தின் வழியே செல்கின்றது. இங்கு ஓர் பெரிய ஏரி இருக்கின்றது. இதற்குப் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. இந்த ஏரிப் பாய்ச்சலினாலும், நிலத்தின் வளத்தினாலும், இங்கு நெல் அதிகமாக விளைகிறது. காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்காக ஓர் சாலை அரக்கோணத்துக்கும், வடகிழக்காக ஓர் சாலை சென்னைக்கும் செல்கின்றன.

செங்கற்பட்டிலிருந்து மறுபடியும் வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்வோம். சிங்கப்பெருமாள் கோயில், கூடுவாஞ்சேரி, வண்டலூர், முதலியவற்றைத் தாண்டி, தாம்பரம் என்னும் ஊரையடைகிறோம். வண்டலூருக்கருகில் ஓர் பெரிய சர்க்கார் காட்டைக் காண்கிறோம். சாலை ஓரமாக மணல் கலந்த செம்மண் பூமியே காணப்படுகிறது. அங்கங்கே ஏரிகள் உள்ள சிற்சில இடங்களில் நெல், தென்னை முதலியவைகள் பயிரிடப்படுகின்றன.

தாம்பரம் சமீப காலத்திலேயே ஓர் பெரிய ஊராக விருத்தியடைந்து வருகிறது. சென்னையிலிருந்து வரும் எலெக்ட்ரிக் ரயில் வண்டித் தொடர்கள் இங்கு முடிவடைகின்றன.

தாம்பரத்தைத் தாண்டி பல்லாவரத்தை அடைகிறோம். வழியில் குரோம்பேட்டை என்ற சிற்றூர் இருக்கிறது. இங்குக் குரோம் தோலினால் பல சாமான்கள் செய்யும் தொழிற்சாலை இருக்கின்றது. பல்லாவரம் ஓர் ஆரோக்கிய ஸ்தலம். சாலை நெடுகப் பல ஐரோப்பிய இந்தியக் கனவான்களின் பங்களாக்களைக் காண்கிறோம். இங்கு குன்றுகளும் இருக்கின்றன. சாலைகள் போட உதவும் சரளைக் கற்களை இக்குன்றுகளில் உடைக்கின்றனர். சாலையில் இருபுரங்களிலும் நெடுக மரங்கள் இருப்பதால் வெயில் காலங்களில் பிரயாணம் செய்ய மிகவும் நேர்த்தியாக இருக்கின்றது. பல்லாவரத்திலிருந்து சென்னை வரை சாலையும் தார் பரப்பப் பட்டு மிக்க வழவழப்பாயிருக்கிறது.


பல்லாவரம்

பல்லாவரத்தைத் தாண்டியவுடன் மீனம்பாக்கத்தையடைகிறோம். இவ்வூர் சமீப காலத்தில் மிக முக்கியமாயிற்று. மேல்நாடுகளுக்குச் சீக்கிரம் செய்தி யனுப்புதற்கும், அங்கிருந்து செய்தி வரவழைப்பதற்கும் ஆன கம்பியில்லாத் தந்தி (Wireless) ஆபீஸ் இங்கு இருக்கிறது. மேலும் வட இந்தியாவிலுள்ள கராச்சியி லிருந்து. நமது தேசத்துக்குத் தெற்கேயுள்ள இலங்கைத் தீவிற்கு ஜனங்களையும், தபால்களையும் ஏற்றிச் செல்லும் ஆகாய விமானங்கள் இங்குத் தங்குகின்றன.


பரங்கி மலை

பிறகு பரங்கிமலைக்கு வந்து சேருகிறோம். இங்கு ஆங்கிலேய ராணுவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மறுபடி பிரயாணம் செய்து கிண்டியை யடைகிறோம். ரயில் பாதையின் மேல் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல் பாலத்தின் வழியே செல்வோம். பாலத்தைத் தாண்டியவுடன், குதிரைப் பந்தய மைதானத்தைக் காண்கிறோம். டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை இங்குக் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. கிண்டியில் சென்னைக் கவர்னருக்காகத் தோட்டம் சூழ்ந்த ஓர் அரண்மனை இருக்கின்றது. இவ்வூரில் முக்கிய கைத்தொழில் என்ன?

கிண்டியை யடுத்த அடையாற்றைத் தாண்ட ஓர் அழகிய வாராவதி இருக்கின்றது. இதற்கு "மார்மலாங் வாராவதி" என்று பெயர். இதைக் கடந்து சைதாப்பேட்டையை யடைகிறோம். அடையாற்றில் சென்னையிலுள்ளவர்களின் துணிகளை நூற்றுக்கணக்கான வண்ணார்கள் வெளுப்பதைக் காண்கிறோம். பாலத்தைத் தாண்டியவுடன் ஜில்லா போர்டு ஆபீஸ் இருக்கும் அழகிய கட்டடத்தையும், அதற்குச் சமீபத்தில் மோட்



ஜில்லா போர்டு ஆபீஸ் சைதாப்பேட்டை

டார் பஸ்கள் நிற்குமிடத்தையும் காண்கிறோம். பிறகு உபாத்தியாயர்களின் போதனாமுறைக் கல்லூரி, (Teachers' College) கால் நடை ஆஸ்பத்திரி, தேகப்பயிற்சி ஆசிரியர்களுக்காகக் கல்லூரி (Y. M. C. A. College of Physical Education) இவைகளைப் பார்த்துக்கொண்டே சென்னையை அடைகின்றோம்.

சென்னையிலிருந்து தென்மேற்காக ஓர் பாதை செல்வதாகச் சொன்னோமல்லவா? நாம் இவ்வழியே சென்றால் பூவிருந்தவல்லி என்னுமிடத்தை யடைகிறோம். வழியில் அபரிமித செங்கல் காளவாய்களைக் காண்கிறோம். அங்கங்கே பயிர்களும்

குருடர் செவிடர் பள்ளிக்கூடம் பூவிருந்தவல்லி

காணப்படுகின்றன. பரங்கிமலையிலிருந்தும் ஒரு சாலை இங்கு வந்து சேருகிறது. மற்றொரு சாலை இங்கிருந்து வடக்கேயுள்ள ஆவடி என்னும் ஸ்டேஷனுக்குச் செல்கிறது. இதுவே பூவிருந்தவல்லிக்குச் சமீபமாயுள்ள ஸ்டேஷன். பூவிருந்தவல்லி வெற்றிலை, புஷ்பங்கள் இவைகளுக்குப் பெயர் போனது. இங்கு ஒரு பழைய கோட்டையும், குருடர் செவிடர்களுக்கான ஒரு பள்ளிக்கூடமும் இருக்கின்றன.

பூவிருந்த வல்லியைத் தாண்டி மறுபடியும் பிரயாணம் செய்வோம். வழியில் கரிசல்மண் நிலங்களையும், பசுமையான பயிர்கள் நிறைந்த வயல்களையும் காண்கிறோம். அங்கங்கே மணற்பாங்கான பூமியில் சவுக்குத் தோப்புகளையும் காண்கிறோம். நெல், வைக்கோல், சவுக்கு விறகு, காய்கறிகள் இவைகளை ஏற்றிக்கொண்டு, அநேக வண்டிகள் சென்னையை நோக்கிச் செல்வதைக் காண்கிறோம். கொஞ்சதூரம் சென்றவுடன் செம்பரம்பாக்கம் ஏரிக்கரை வழியே சாலை செல்கின்றது. கடைசியாக ஸ்ரீபெரும்புதூர் க்ஷேத்திரத்தை யடைகிறோம்.

வைஷ்ணவ ஆச்சாரியாரான இராமாநுஜாச்சாரியாருக்கு ஒரு கோயில் இங்கு உண்டு. இவ்வூரைச்



ஸ்ரீபெரும்பூதூர் கோயில்

சுற்றித் தோப்புகளும், வயல்களும் எவ்வளவு செழிப்பாகக் காணப்படுகின்றன பார். இங்கிருந்து தென் கிழக்கே வண்டலூருக்கும், வடமேற்கே திருவள்ளூருக்கும் சாலைகள் செல்கின்றன. திருவள்ளூரே இவ்வூருக்குச் சமீபமாயுள்ள ரயில்வே ஸ்டேஷன்.

ஸ்ரீபெரும்பூதூரைத் தாண்டியதும் சாலை நெடுக ஏறக்குறைய செம்மண் பூமியாகவே இருக்கின்றது. பிறகு இச்சாலை காஞ்சீபுரத்துக்குச் சமீபத்தில் ரயில் பாதையைத் தாண்டி, காஞ்சீபுரத்திலிருந்து வட ஆற்காடு ஜில்லாவுக்குச் செல்லும் பாதையுடன் கலக்கின்றது.

சென்னையிலிருந்து வடக்காக ஓர் பாதை செல்கின்றதல்லவா? இவ்வழியே சென்று சீக்கிரத்தில் புழலேரிக் கரையை யடைகிறோம். இங்கு சாலைக்கு இருபுறத்திலும் செம்மண் பூமியே விசேஷமாகக் காணப்படுகிறது. பிறகு கும்மிடிப்பூண்டியை அடைகிறோம். இது ஒரு வியாபார ஸ்தலம். இங்கிருந்து மிளகாயும், மீன்களும் சென்னைக்கு எடுத்துச் செல்லப்படுவதைக் காண்கிறோம். சில சமயங்களில் நெல்லூர் ஜில்லாவிலிருந்து பலர் மாடுகளைச் சென்னைக்கு ஓட்டிச் செல்வதைக் காண்கிறோம். கடைசியாக இச்சாலை நெல்லூர் ஜில்லாவுக்குச் செல்கின்றது.

கும்மிடிப்பூண்டியி லிருந்து மற்றொரு ரஸ்தா மேற்காகச் சென்று நாகலாபுரம் குன்றுகளுக்கருகிலுள்ள சத்யவேடு கிராமத்தை யடைகிறது. வழியில் அநேக ஏரிகளையும், மணல் பாங்கான பூமியையும் காண்கிறோம். சத்யவேட்டிலிருந்து மேற்காகச் சித்தூர் ஜில்லாவுக்கு ஓர் ரஸ்தாவும் தெற்காகத் திருவள்ளூருக்கு ஒரு ரஸ்தாவும் செல்கின்றன.

இவைகளே நமது ஜில்லாவில் முக்கியமான ரஸ்தாக்கள். இவைகளைத் தவிரப் பல சிறு ரஸ்தாக்களும் இருக்கின்றன.

பயிற்சி

1. நீங்கள் உங்கள் ஊரிலிருந்து சென்னைக்குச் செல்ல விரும்பினால் எந்த மார்க்கமாகப் போவீர்கள்?
2. நீங்கள் கருட உற்சவத்திற்குக் காஞ்சிபுரத்துக்கு மோட்டாரிலேயே செல்ல விரும்பினால், எந்தெந்த ஊர்கள் வழியே செல்ல வேண்டும்?
3. கீழ்க்கண்ட இடங்கள் எவ்விதத்தில் முக்கியமானவை?

   (i) மதுராந்தகம் (ii) பொன்விளைந்த களத்தூர் (iii) திருக்கழுக்குன்றம் (iv) திருப்போரூர் (v) தாம்பரம் (vi) குரோம்பேட்டை (vii) மீனம்பாக்கம் (viii) கிண்டி.
4. செங்கற்பட்டிலிருந்து எங்கெங்கு ரஸ்தாக்கள் செல்கின்றன?

3. ரயில் மார்க்கம்

இது வரையில் நமது ஜில்லாவில் பல பாகங்களை ரஸ்தாக்கள் வழியாக மோட்டாரில் சென்று பார்த்தோமல்லவா? ரஸ்தாக்களைத் தவிர இந்த ஜில்லாவில் பல இடங்களுக்கு ரயில் வண்டித் தொடர்களும் செல்கின்றன.



ரயில் வண்டித் தொடர்

மோட்டார் பஸ்களைவிட ரயில்வண்டிகளில் குறைந்த செலவில் அதிக சௌகரியத்துடன் பிரயாணம் செய்யலாம்.

நமது ஜில்லா வழியாகச் செல்லும் இருப்புப் பாதைகள் சென்னையிலிருந்தே புறப்பட்டு வடக்காக ஒன்றும், தெற்காக ஒன்றும், மேற்காக ஒன்றும் ஆக மூன்று பாதைகள் செல்லுகின்றன.

முதலாக வடக்கு நோக்கிச் செல்லும் பாதை வழியே செல்வோம். சென்னையிலிருந்து புறப்பட்டு நமது ஜில்லாவின் எல்லையை யடைந்த பிறகு திருவத்தியூர், எண்ணூர், அத்திப்பட்டு இவைகளைக் கடந்து மீஞ்சூரை யடைகிறோம். இங்கு வெற்றிலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. எண்ணூருக்குச் சமீபத்தில் குசஸ்தலை யாற்றைக் கடக்க ஓர் பாலம் இருக்கிறது. ரயில் பாதைக்குச் சமீபத்தில் உப்புப்பாத்திகளையும், கூட்டங்கூட்டமாக மீன் பிடிக்கும் செம்படவர்களையும் காண்கிறோம். பிறகு அநுப்பம்பட்டு ஸ்டேஷனைத் தாண்டிப் பொன்னேரியை அடைகிறோம். இங்குச் சாயத்தொழில் நடக்கிறது. இங்கு ஓர் வைஷ்ணவ ஆலயமும் இருக்கிறது. பிறகு கவரைப்பேட்டை, கும்மிடிப்பூண்டி இவைகளைக் கடந்து நெல்லூர் ஜில்லாவுக்குள் பிரவேசிக்கிறோம்.

பிறகு மேற்கு நோக்கிச் செல்லும் இருப்புப்பாதை வழியே பிரயாணம் செய்வோம். சென்னையிலிருந்து அரக்கோணம் வரை 45 மைல் தூரத்துக்கு இரண்டு இருப்புப் பாதைகளாகப் போட்டிருக்கிறார்கள். இப்பாதையில் நமது ஜில்லாவிலுள்ள முதல் ஸ்டேஷன் பேரம்பூர். இங்கு ஓர் பெரிய ரயில் தொழிற்சாலை இருக்கிறது. இங்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்கிறார்கள். இதற்குப் பக்கத்தில் செம்பியம் அல்லது சிறுவள்ளூர் என்ற கிராமம் இருக்கின்றது. பிறகு வில்லிவாக்கம் கொரட்டூர், அம்பத்தூர் இவைகளின் வழியே ஆவடியையடைகிறோம். மேற்கண்ட ஸ்டேஷன்களின் சமீபத்தில் சென்னையிலுள்ள பல உத்தியோகஸ்தர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் சௌகரியத்துக்காகக் காலையிலும், மாலையிலும் இவ்விடங்களுக்கும், சென்னைக்கும் மத்தியில் அநேக ரயில்வண்டித் தொடர்கள் ஓடுகின்றன. ஆவடியிலிருந்து பூவிருந்தவல்லிக்கு ஓர் ரஸ்தா செல்வதாகச் சொன்னோமல்லவா? ஆவடியில் வெற்றிலை, புஷ்பம், வாழைப்பழம் இவைகள் விசேஷமாகக் கிடைக்கின்றன. பிணாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குக் கூலியாட்களைச் சேகரிக்கும் ஆபீஸ்கள்

ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலேயே இருக்கின்றன.

பிறகு பட்டாபிராம், தின்னனூர், செவ்வாப்பேட்டை இவைகளைக் கடந்து திருவள்ளூரை யடைகிறோம்.



திருவள்ளூர்க் குளம்

இங்கும் செம்மண் பூமிகளே காணப்படுகின்றன. ஊருக்கும், ஸ்டேஷனுக்கும் மூன்று மைல் தூரம் உள்ளது.

திருவள்ளூரைத் தாண்டிக் கடம்பத்தூர், மணவூர், திருவேலங்காடு இவற்றைக் கடந்து, வட ஆற்காடு ஜில்லாவுக்குள் பிரவேசிக்கிறோம். திருவேலங்காடு ஒரு க்ஷேத்திரம்.

இப்பொழுது தெற்கு நோக்கிச் செல்லும் பாதைவழியே செல்வோம்.



எலக்ட்ரிக் ரயில்வே ஸ்டேஷன் கிண்டி

சென்னையிலிருந்து அரக்கோணம் வரை இரண்டு இருப்புப் பாதைகள் இருக்கின்றன என்று சொன்னேனல்லவா? இதே போல் சென்னையிலிருந்து தெற்கே தாம்பரம் வரை 18 மைல் தூரம் மூன்று இருப்புப்பாதைகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்றில் நீராவியினால் செல்லும் ரயில் வண்டிகளும், மற்ற இரண்டில் மின்சார சக்தியினால் ஓடும் ரயில் வண்டிகளும் செல்கின்றன. சென்னை ஆபீசுகளில் வேலை செய்பவர்கள், கலாசாலை மாணவர்கள் முதலியவர்களில் பலர், பல்லாவரம் வரை எல்லா ஊர்களிலும் இருக்கிறார்கள். இவர்கள் சென்னைக்குப் போக, வரச் சவுகரியத்தை யுத்தேசித்து, இங்கு அடிக்கடி ரயில் வண்டிகள் ஓடுகின்றன.

நமது ஜில்லாவில் இந்த இருப்புப் பாதையிலுள்ள முதல் ஸ்டேஷன் கோடம்பாக்கம். இங்கு அநேக தோல் பதனிடும் சாலைகள் இருக்கின்றன. பிறகு மாம்பலம், சைதாப்பேட்டை, கிண்டி, பரங்கிமலை, மீனம்பாக்கம் இவற்றைக் கடந்து பல்லாவரத்தை யடைகிறோம். பல்லாவரத்துக் கருகிலுள்ள குன்றுகளில் பலர் கற்கள் உடைக்கிறார்கள். இக் கற்களால் என்ன உபயோகம்? இவற்றை எவ்விடங்களுக்குக் கொண்டு போகிறார்கள்? பிறகு குரோம்பேட்டையைத் தாண்டித் தாம்பரத்தை யடைகிறோம். இங்கு அநேக ரயில் வண்டித்தொடர்கள் இருக்கின்றன.

பிறகு வண்டலூர்க் காடுகளின் சமீபமாகச் சென்று, கூடுவாஞ்சேரி காட்டுப்பாக்கம், சிங்கப் பெருமாள் கோயில் இவைகளைத்தாண்டி செங்கற்பட்டை யடைகிறோம். சிங்கப்பெருமாள் கோயில் ஸ்டேஷனுக்குச் சமீ

பத்தில் நரசிம்ம ஸ்வாமி கோயில் ஒன்று இருக்கிறது.

செங்கற்பட்டு ஸ்டேஷனை யொட்டி ஓர் பெரிய ஏரி காணப்படுகிறது பார். இதன் பெயர் என்ன? செங்கற்பட்டு ஒரு ரயில்வே சந்திப்பு. இங்கிருந்து காஞ்சிபுரம் வழியே அரக்கோணத்துக்கு ஓர் கிளைப்பாதை செல்கின்றது செங்கற்பட்டை விட்டு மறுபடியும் புறப்பட்டு ஒட்டிவாக்கத்தை யடைகிறோம். இதற்கருகில் பொன்விளைந்த களத்தூர் என்று ஒரு சிறு ஊர் இருக்கின்றது. ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய தமிழ்ப் புலவர்கள் பிறந்த இடம் இதுவே. அடுத்த ஸ்டேஷனாகிய பட்டாளத்துக் கருகில் ரயில் பாதை பாலாற்றைக் கடக்க ஓர்பாலம் கட்டியிருக்கிறார்கள் பார். பிறகு கருங்குழி, மதுராந்தகம், பாக்கம், சோத்துப்பாக்கம், அச்சிறுபாக்கம், தொழுப்பேடு இவைகளைத் தாண்டித் தென் ஆற்காடு ஜில்லாவிற்குள் பிரவேசிக்கிறோம் மதுராந்தகத்தைச் சுற்றிலும் கரிசல் மண் நிறைந்த பூமி யிருக்கின்றது. இங்கு எக்காலத்திலும் பச்சைப் பசேலென்று பயிர்கள் காண்கின்றன.

செங்கற்பட்டி லிருந்து அரக்கோணத்துக்கு ஒரு கிளைப்பாதை செல்வதாகச் சொன்னோமல்லவா? இப்பொழுது இவ்வழியே பிரயாணம் செய்வோம். இப்பாதை செங்கற்பட்டுக்குச் சமீபத்திலுள்ள மடுவு ஆற்றைக் கடந்ததும், ரெட்டிப்பாளையம், வில்லியம் பாக்கம், பழைய சீவரம், வாலாஜாபாத் இவைகளைக் கடந்ததும், காஞ்சிபுரத்தை யடைகிறது. வழிநெடுக நெல் வயல்களைக் காண்கிறோம் காஞ்சிபுரத்திலுள்ள கோயில் கோபுரங்கள் வெகு தூரத்திலிருந்தே தெரிகின்றன பார். பிறகு திருமால்பூர் ஸ்டேஷனை யடைகிறோம். இங்குச் செங்குந்தர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். எனவே, நெசவுத் தொழில் விசேஷமாக நடைபெறுகின்றது. இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள பள்ளூர் என்னுமிடத்தில் வெகு காலத்துக்குமுன் ஆங்கிலேயருக்கும், மைசூரை யாண்ட ஹைதர்அலி என்பவருக்கும் யுத்தம் நடந்தது.

பிறகு வட ஆற்காடு ஜில்லாவுக்குள் பிரவேசிக்கிறோம்.

4. ஆகாய மார்க்கம்

மீனம்பாக்கத்தில் ஆகாய விமானங்கள் வந்து தங்க விடுதிகள் கட்டியிருக்கிறார்கள் என்று முன்பே படித்தோமல்லவா? இங்கிருந்து வட இந்தியாவிலுள்ள பம்பாய், கராச்சி முதலிய இடங்களுக்கு வாரத்துக்கு ஐந்து தடவை ஆகாய விமானங்கள் மனிதர்களையும், தபால்களையும் ஏற்றிச் செல்லுகின்றன. கராச்சியி லிருந்து டில்லி, கல்கத்தா முதலிய இடங்களுக்கும், இங்கிலாந்து முதலிய தேசத்துக்கும் ஆகாய விமானங்கள் வாரத்துக்கு ஐந்து தடவை செல்கின்றன.

மீனம்பாக்கத்திலிருந்து புறப்பட்டுச் சில நிமிஷங்களுக்குள் ஆகாய விமானம் அதிக உயரத்தில் கிளம்பி,



ஆகாய விமானம்

வடக்கு நோக்கி மணிக்கு நூறு மைல் வேகத்துக்கு மேல் பிரயாணம் செய்கின்றது. புறப்பட்டுச் சுமார் அரை மணிக்குள்ளாகவே நமது ஜில்லாவின் வடக்கு எல்லையைத் தாண்டிவிடு

கிறோம். இது எவ்வளவு விந்தையாகக் காணப்படுகிறது பார்! இம் மாதிரியே தெற்கே இலங்கைத் தீவிலுள்ள கொழும்பு என்னும் பட்டணத்திற்கும் ஆகாய விமானங்கள் செல்லுகின்றன.

பயிற்சி

1. உங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் எது?
2. நமது ஜில்லாவில் ரயில் பாதைகள் சந்திப்பு ஸ்டேஷன் எது? இங்கிருந்து எங்கெங்கே ரயில் பாதைகள் செல்லுகின்றன?
3. சென்னைக்கும், அரக்கோணத்துக்கும் இடையே இரண்டு இருப்புப் பாதைகள் போடப்பட்டிருப்பது ஏன்?
4. செங்கற்பட்டிற்கும், காஞ்சிபுரத்துக்குமிடையே யுள்ள ஸ்டேஷன்கள் எவை?
5. சென்னையிலிருந்து எண்ணூர் செல்லும்பொழுது, என்னென்ன காட்சிகளைக் காண்கிறோம்?
6. செங்கற்பட்டிலிருந்து தெற்கே செல்லும் இருப்புப் பாதைகள் எந்த ஸ்டேஷனுக்கருகில் பாலாற்றைக் கடக்கிறது?
7. மீனம்பாக்கத்தி லிருந்து எங்கெங்கு ஆகாய விமானங்கள் செல்கின்றன? இவை எப்படி உபயோகப்படுகின்றன?

இருபத்தி ஒன்றும் பாடம்

வியாபாரம்

உங்களில் பெற்றோர் அநேகர்களுக்குச் சொந்த நிலம் இருக்கின்றதல்லவா? அவைகளில் விளையும் தானியங்களில் கொஞ்சப் பாகத்தைச் சொந்த உபயோகத்திற்காக வைத்துக்கொண்டு, மிகுதியை விற்றுத் தேவையான துணி முதலிய பல பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்கள் அல்லவா? அதே போல நமது ஜில்லாவிலும், நமக்குத் தேவையில்லாத பொருள்களை வெளியிடங்களுக்கு அனுப்பிவிட்டு, நமது ஜில்லாவில் கிடைக்காத, நமக்குத் தேவையான பொருள்களை வெளியிடங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறோம். இதற்கு வியாபாரம் என்று பெயர். சாமான்களை வெளியூருக்கு அனுப்புவதை ஏற்றுமதி என்றும், வெளியூரிலிருந்து சாமான்கள் வரவழைப்பதை இறக்குமதி என்றும் சொல்வதுண்டு.

நமது ஜில்லாவிலிருந்து பின் பக்கம் கண்ட சாமான்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சீமைத் துணிகள், கண்ணாடிச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், கிரோஸினெயில், பீங்கான் சாமான்கள், பருப்பு, மிளகாய், புளி, புகையிலை, உங்களுக்கு வேண்டிய சிலேட்டு, காகிதம், பென்சில், பேனா இவைகள் வெளியிடங்களி லிருந்து வரவழைக்கப் படுகின்றன. இங்கு வெளி நாடுகளிலிருந்து பெரிய கப்பல்கள் இச் சாமான்களைச் சென்னைக்குக் கொண்டு வருகின்றன. வியாபாரிகள் அங்கிருந்து அவைகளை வாங்கி வந்து நமக்கு விற்பனை செய்கிறார்கள். நீங்கள் கப்பலைப் பார்த்திருக்கிறீர்களா?

நெ	தாலுகா	ஏற்றுமதியாகும் சாமான்கள்
1.	பொன்னேரி	உப்பு, விறகு, காய்கறிகள், பழங்கள், நெல், வெல்லம், கிளிஞ்சல், மல் துணிகள்.
2.	திருவள்ளூர்	நெல், கொள், வெற்றிலே, எள், நிலக்கடலே, சோளம்.
3.	சைதாப்பேட்டை	வெற்றிலே, நெல், சோப்புகள், சுருட்டு, தோல், உப்பு, லுங்கிகள், பாதரக்ஷைகள், வத்திப்பெட்டிகள், விறகு.
4.	ஸ்ரீபெரும்பூதூர்	நெல், வெல்லம், சர்க்கரை, கம்பு, கேழ்வரகு, சோளம்.
5.	செங்கற்பட்டு	காய்கறிகள், பழங்கள், விறகு, நெல், கேழ்வரகு, கம்பளம், கைக்குட்டைகள், பிரம்புச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், பாய்கள்.
6.	காஞ்சிபுரம்	பட்டுச்சேலேகள், நூல் வஸ்திரங்கள், நெல், நிலக்கடலே, கேழ்வரகு, எள், பாத்திரங்கள்.
7.	மதுராந்தகம்	நெல், வெற்றிலே, நிலக்கடலே, எள், கேழ்வரகு, கம்பு, சோளம், விறகு.

பயிற்சி

1. உங்கள் ஊரிலிருந்து எந்தெந்தச் சாமான்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன? இவற்றை எப்படி அனுப்புகிறார்கள்?
2. நம் ஜில்லாவிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படும் பொருள்களும், அவை கிடைக்கும் இடங்களும் மாற்றிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளேச் சரியாக எழுதுக :—

சாமான்கள்	ஊர்கள்
வெற்றிலே	கிண்டி
பட்டுச்சேலேகள்	மதுராந்தகம்
வத்திப்பெட்டி	செங்கற்பட்டு
தோல் சாமான்கள்	காஞ்சிபுரம்
சுருட்டு	திருவொற்றியூர்
சோப்புகள்	குரோம்பேட்டை
கைக்குட்டைகள்	சைதாப்பேட்டை

இருபத்திரண்டாம் பாடம்

சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்

தம்பி:-அண்ணா, நமது தகப்பனார் எங்கே போயிருக்கிறார்?

அண்ணன்:-தம்பி, அவர் கோடைக் கானலுக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வர இன்னும் ஒரு மாதம் செல்லும்.

த:-அங்கே அவர் எதற்காக ஒரு மாதம் தங்குகிறார்?

அ:-இப்பொழுது கோடைக் கால மல்லவா? இங்கு எவ்வளவு உஷ்ணமாயிருக்கிறது! அதனால் தான் நமது பாடசாலையிலும் விடுமுறை விட்டிருக்கிறார்கள். கோடைக்கானல் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் நமது பிதா அங்கே ஒரு மாதம் இருந்து விட்டு வருவார்.

த:-இங்கு இவ்வளவு உஷ்ணமாயிருக்கும் பொழுது கோடைக்கானலில் மாத்திரம் குளிர்ச்சியா யிருப்பதன் காரணம் என்ன?

அ:-நமது ஊர் தாழ்ந்த சம வெளியிலிருக்கிறது. நமது தேசமும் உஷ்ணதேசம். ஆதலால் இங்கு உஷ்ணமாயிருக்கிறது. கோடைக்கானல் உயரமான மலைப் பிரதேசம். ஆகையால் அங்குக் குளிர்ச்சியாயிருக்கிறது.

த:-அண்ணா, கோடைக் கால வாசத்துக்கு ஜனங்கள் இன்னும் எங்கேச் செல்லுகிறார்கள்?

அ:-சிலர் நீலகிரி மலையிலுள்ள உதகமண்டலத்துக்குப் போகிறார்கள். வேறு சிலர் மண்டபம், கன்னியாகுமரி முதலிய கடற்கரையிலுள்ள ஊர்களுக்குச் செல்லுகிறார்கள்.

த:-கடற் கரைக்கு ஏன் செல்லுகிறார்கள்?

அ:-கடற் கரையில் அடிக்கடி கடற் காற்று வீசிக்கொண்டிருக்கும். அக் காற்றுக் கோடைக்கால உஷ்ணத்தையும் குளிர்காலச் சீதளத்தையும் குறைக்கும்.

ஆகவே, உஷ்ண தேசத்திலுள்ள சமவெளிகள் உஷ்ணமாகவும், உயர்ந்த மலைப் பிரதேசங்கள் குளிர்ச்சியாகவும், கடற்கரைப் பிரதேசங்கள் கோடைக்காலத்திலும் குளிர் காலத்திலும் மித உஷ்ணமாகவும் இருக்கும்.

த:-மலைப் பிரதேசங்களில் மரங்கள் அடர்த்தியா யிருக்கின்றனவே என்ன காரணம்?

அ:-அங்கு அடிக்கடி மழை பெய்வதால் காடுகள் அடர்ந்து மரங்கள் உண்டாயிருக்கின்றன.

த:-அங்குள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?

அ:-அப்பிரதேசத்திலுள்ள காடுகளில் மரங்களை வெட்டியும், வேட்டையாடியும் அங்குள்ள ஜனங்கள் ஜீவனம் செய்கிறார்கள். சில மலைச் சரிவுகளில்தேயிலை, காப்பி, ரப்பர், ஏலக்காய் முதலியவை பயிர் செய்யப்படுகின்றன. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள்.

த:-நாம் வசிக்கும் சமவெளியிலுள்ள ஜனங்களின் முக்கியத் தொழில் என்ன?

அ:-நமது பிரதேசத்தி லுள்ளவர்களின் தொழில் விவசாயம். இங்குச் சில நிலங்களில் நெல், வாழை, கரும்பு முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன; வேறு சில நிலங்களில் பருத்தி, சோளம் முதலியவைகளை ஜனங்கள் விளைவிக்கிறார்கள்.

த:-அதற்கு என்ன காரணம்?

அ:-நிலங்களில் நன்செய் என்றும் புன்செய் என்றும் இரண்டு வகைகள் உண்டு என்பது உனக்குத் தெரியுமல்லவா? உஷ்ணமும் மழையும் அதிகமான இடங்களில் நன்செய்ப் பயிர்களாகிய நெல், வாழை முதலியவைகளும், மழை குறைவான இடங்களில் பருத்தி, சோளம், கம்பு முதலிய புன்செய்ப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

த:-அண்ணா, நம் ஊரில் ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் மேய்ப்பதற்கு எங்கேயோ ஓட்டிக் கொண்டுபோகிறார்களே! அவைகள் எங்கே மேய்கின்றன?

அ:-இடையர்கள் அவைகளை மலையடிவாரத்துக்கும், சாகுபடி செய்யாத இடங்களுக்கும் ஓட்டிக்கொண்டு போகிறார்கள். அங்கே புல் நன்றாய் வளர்ந்திருக்கும். அவைகள் அவ்விடங்களில் வயிறாரப் புல் மேய்கின்றன.

த:-நமது நாட்டின் சில பாகங்களில் பருத்தி விசேஷமாய்ப்பயிராகிறது. அங்குள்ள ஜனங்கள் என்ன தொழில் செய்கிறார்கள்?

அ:-பருத்தி பயிராகும் பாகங்களில் பஞ்சாலைகள் அனேகம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அங்குள்ள ஜனங்களில் அநேகர் அவைகளில் வேலை செய்கிறார்கள். சிலர் நூல் நூற்றும், பஞ்சு வஸ்திரங்கள் நெய்தும் பிழைக்கிறார்கள். அப்பிரதேசத்தில் நூல் நூற்கும் இயந்திரசாலைகளும், நெசவு இயந்திரசாலைகளும் ஏற்படுகின்றன. அவைகளிலும் ஜனங்கள் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள்.

த:-கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?

அ:-கடற் கரைகளில் அநேகமாகச் செம்படவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் கட்டுமரங்களிலும், படகு

களிலும்ஏறிச்சென்று,கடலில் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் கடலில் நீந்துவதிலும் மூழ்குவதிலும் வல்லவர்கள்; ஆதலால் கடலில் அதிக ஆழத்திலுள்ள முத்து, ஸ்பஞ்சு முதலிய பொருள்களை எடுக்கிறார்கள்.

த:-சில இடங்களில் கள்ளி, எருக்கு, வேல் முதலிய தாவரங்கள் ஏன் அதிகமாக இருக்கின்றன?

அ:-சில பிரதேசங்களில் மழை மிகக் குறைவு. ஆதலால் அங்கு அதிகத் தண்ணீர் தேவையில்லாத கள்ளி முதலிய முட்களடர்ந்த தாவரங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகள் சில வருஷங்கள் மழையில்லா விட்டாலும் பட்டுப் போகமாட்டா.

த:-மலையாளத்திலிருந்து தேங்காய் ஏராளமாய் வருகின்றன; அவைகள் பெரியவையாயு மிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன?

அ:-மலையாளம் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கிறது. அங்குத் தரை மணற் பாங்கானது. மணற் பாங்கான இடங்களில் தென்னை, பனை, பாக்கு முதலிய மரங்கள் செழிப்பாய் வளரும். ஆதலால் அங்கே தென்னை மரங்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. தேங்காய்கள் அங்கிருந்து அயல் பிரதேசங்களுக்கு வியாபாரத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்குச் சவுக்கு மரங்களும் நன்றாய் வளர்கின்றன.

த:-இவ்வளவு உஷ்ணமான கோடைக் காலத்தில் மழை பெய்து கொண்டிருந்தால் குளிர்ச்சியாயிருக்குமே?

அ:-நீ சொல்வது உண்மைதான். ஆனால் இப்பருவத்தில் மழை பெய்வது அபூர்வம். நமது பிரதேசத்தில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் மழைபெய்யும். ஏனென்றால் அப்பொழுதுதான் வடகிழக்கிலிருந்து ஒரு காற்று வீசுகிறது. அப்பொழுது மழை பெய்கிறது. அது தான் நமக்கு மழைக் காலம்.

த:-நமது நாட்டில் 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?

அ:-ஆடி மாதத்தில் குடியானவர்கள் நிலங்களை உழுது விதைகளை விதைப்பார்கள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் கொஞ்சம் மழை பெய்யும். அதற்குள் பயிர்களும் முளைத்துச் சற்று வளர்ந்திருக்கும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நல்ல மழை பெய்யும். அது பயிர்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். மார்கழி மாதக் கடைசியில் அல்லது தை மாதத்தில் கதிர்கள் முதிர்ந்து விடும். அப்பொழுது குடியானவர்கள் அறுவடை செய்வார்கள். ஆதலால் ஆடி மாதமே விதைப்பதற்கு மிகவும் தகுதியான காலம்.

த:-நிலங்களில் தை மாதம் அறுவடையான பிறகு ஆடி மாதம் வரை

குடியானவர்கள் என்ன செய்வார்கள்?

அ:அறுவடையான பின் எள்ளு, நிலக்கடலை முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவையில்லை. சில சமயங்களில் கோடைக் காலங்களில் மழை பெய்வதும் உண்டு. இல்லாவிடில் கிணற்றிலிருந்து அப்பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்கப்படும். சில நிலங்களில் பருத்தியும் பயிர் செய்யப்படுகிறது.

த:-நமது நாடு முழுவதும் இவ்விதம் தான் விவசாயம் நடைபெறுகிறதா?

அ:-மலையாளக்கரையில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் ஏராளமான மழை பெய்கிறது. அங்கு அப்பொழுது உஷ்ணமும் தணிவடைகிறது. ஜனங்களும் அம்மாதங்களில் பயிர் செய்கிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலிய நதிகள் பாயுமிடங்களில் ஜல வசதி அதிகமாயிருக்கும். ஆதலால் அங்கு நன்செய்களே அதிகமாய்க் காணப்படும். நெல், வாழை, கரும்பு முதலியவைகளே அங்கு விசேஷமாகப் பயிர் செய்யப்படுகின்றன.

த:-நமது நாட்டு ஜனங்களில் அநேகர் சட்டை யணிந்துகொள்வதில்லையே. என்ன காரணம்?

அ:-நமது நாடு உஷ்ணமானது. நாம் சட்டை முதலியவைகளை அணிந்துகொண்டால் வியர்வை அதிகமாகிறது. நமக்குக் காற்றோட்டம் அதிகமாய் வேண்டும். அதனால் தான் நாம் கோடைக் காலத்தில் பஞ்சினால் செய்த இலேசான ஆடைகளை அணிந்து கொள்ளுகிறோம். குளிர்காலத்தில் நாம் கம்பளிப் போர்வைகளை உபயோகிக்கிறோம்.

த:-மலைப் பிரதேசங்கள் சமவெளியை விடக் குளிர்ச்சியாயிருக்குமே. அங்குள்ளவர்கள் என்ன ஆடைகளை அணிந்துகொள்வார்கள்?

அ:-அவர்கள் கம்பளியினால் செய்த உடைகளை அணிவார்கள். அவைகள் தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளியே போகாமல் காக்கும்.

பயிற்சி

1. கோடைக்காலத்தில் உஷ்ணம் தாங்க முடியாமல் ஜனங்கள் எங்கெங்கே செல்கிறார்கள்? அந்த இடங்களில் உஷ்ணம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?
2. மலைப்பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?
3. கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?
4. நமது நாட்டில் 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?
5. தைமாதம் அறுவடையான பிறகு ஆடிமாதம் வரை குடியானவர்கள் என்ன செய்வார்கள்?

[illegible]